# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபால்ப்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ புரட்டாதி 1982 ★ இதழ் - 81


## பாரதியாரின் புகழ்பரவும் மில்க்வைற் தொழிலகம்



மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் புகழை அறிந்தவர்களுள் மில்க்வைற் தொழிலதிபரும் ஒருவர். இற்றைக்குப் பத்தாண்டுகளுக்கு முன் 12–10–1972ஆம் நாள் பாரதியாரின் பேர்த்தியார் கலாநிதி விஜயபாரதி சுந்தரராசன் யாழ்ப்பாணம் வந்தபோது தொழிலதிபர் கனகராசா பாரதியாரின் படத்தை ஆயிரக்கணக்கில் அச்சிட்டு வழங்கினுர்.

பின்னர் பாரதியாரின் உருவச்சிலை நல்லூர் அரசடிச் சந்தியில் 24-7-76இல் நிறுவப்பெற்றபோது, அவரின் பாடல் தொகுதியொன்றைச் சிறுவர்க்குப் பயன்படும் வகையில் அச்சிட்டு வழங்கினுர்.

பாரதியாரின் நூற்றுண்டு விழா 1982இல் கொண்டாடப்பெறும்போது, அவரின் படத்தைப் பெரிய அளவிற் பிரசுரித்து ஆயிரக்கணக்கில் விநியோகித்தார்.

பாரதி விழாக் கொண்டாடிய இடங்களில், வைத்தீஸ்வரா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம், வவுனியா காந்தீய இல்லம் முதலிய இடங்களில் வர்ண மை கொண்டு வரைந்த பெரிய படங்களை உதவி ஊக்குவித்தார். அண்மையில் பாரதி பாடல் திரட்டு ஒன்றை அச்சிட்டு வழங்கினுர். இப்போது இதனைச் சிறப்பிதழாகத் தருகிருர்.

---

### பாரதியாரின் சங்கற்பங்கள்

1: இயன்றவரை தமிழே பேசுவேன். தமிழே எழுதுவேன். சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன். எப்பொழுதும் பராசக்தி - முழு உலகின் முதற்பொருள்- அதனையே தியானஞ் செய்து கொண்டிருக்க முயல்வேன். அதனைக்குறித்தே ஓயாமல் எழுதிக்கொண்டிருக்க முயல்வேன்.

இடையருத தொழில் புரிந்து இவ்வுலகப் பெருமைகள் பெறமுயல்வேன். இல்லாவிடின் விதிவசமென்று மகிழ்ச்சியோடிருப்பேன்.

எப்போதும் மலர்ந்த முகம், இனிய சொல், தெளிந்த சித்தம் இவற்ருேடிருப்பேன், ஓம்.

உ
சிவமயம்






## திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்

### திருவதிகை வீரட்டானம்

அடையாளத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

முண்டத்திற் பொலிந்திலங்கு மேனி யானே
முதலாகி நடுவாகி முடிவா னானே
கண்டத்தில் வெண்மருப்பின் காறை யானே
கதநாகங் கொண்டாடும் காட்சி யானே
பிண்டத்தின் இயற்கைக்கோர் பெற்றி யானே
பெருநிலநீர் தீவளிஆ காச மாகி
அண்டத்துக் கப்பாலாய் இப்பா லானே
அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே.

திருச்சிற்றம்பலம்

எண்ணிலடங்காப் பிரமர்களின் தலைகளை மாலையாகக் கொண்டும், முதல் நடு முடிவாகி நின்றும், கண்டத்தில் பன்றியின் கொம்பணிந்தும், கோபமுற்ற பாம்பணி கொண்டும், பிண்டத்தில் உள்ளவாறே அண்டத்திலும் நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களிற் கலந்து நின்றும், அவற்றுக்கு அப்பாலாய் நின்றும் நிலவுபவனாயின், அவனே திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானவர்.




### அடக்கமுடைமை

(உள்ளம், மொழி, மெய் இவற்றைத் தீய வழியிற் செல்ல விடாமல் அடக்கிக் கொள்ளுதல்.)

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

ஆமை தன் உறுப்புக்களை அடக்கிக் கொள்ளுதல் போல் ஒருவன் ஒரு பிறப்பிலே தன் ஐந்து பொறிகளை அடக்க வல்லவனாயின், அஃது அவனுக்கு எழுவகைப் பிறப்பிலும் உறுதி தருவதாகும்.

### SELF CONTROL

If a person can subdue the five senses like the tortoise in one life, it would be a source of strength in all the persons seven births.

## 1982 செப்ரம்பர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | புதன் | — | ஆவணி ஓணம் |
| 2 | வியாழன் | — | நடேசர் அபிடேகம்<br>செல்லச்சந்நிதி தேர் |
| 3 | வெள்ளி | — | பூரணை<br>உமாமகேஸ்வர விரதம் |
| 4 | சனி | — | மஹாளய ஆரம்பம் |
| 9 | வியாழன் | — | கார்த்திகை விரதம்<br>கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி நினைவு |
| 10 | வெள்ளி | — | பொன்னாலை தேர் |
| 11 | சனி | — | பாரதியார் மறைவு தினம் |
| 13 | திங்கள் | — | ஏகாதசி விரதம் |
| 15 | புதன் | — | பிரதோஷ விரதம் |
| 17 | வெள்ளி | — | அமாவாசை விரதம்<br>வல்லிபுரம் கொடி<br>புரட்டாதி பிறப்பு |
| 19 | ஞாயிறு | — | வண்ணை பெருமாள் கொடி |
| 28 | செவ்வாய் | — | ஏகாதசி விரதம் |
| 30 | வியாழன் | — | பிரதோஷ விரதம் |

### நாதஸ்வர வித்துவானுக்குச்
## சமாதான நீதவான் பட்டம்

அளவெட்டியூர் திரு. N. K. பத்மநாதன் அவர்களின் நாதஸ்வரம் இலங்கையிலன்றி மலேசியா, சிங்கப்பூர், முதலிய கடல்கடந்த நாடுகள்வரை ஒலித்துள்ளது. அவரின் வித்துவத்தன்மைக்குக் கிடைத்த ஜே. பி. பட்டம் இசைக்கலைக்குக் கிடைத்த பெருமையாகும். பட்டம் பெற்ற பத்மநாதன் அவர்களைப் பாராட்டுகிறோம்.

## பனையபிவிருத்தி



இலங்கையில் பனையபிவிருத்தி பெருமளவில் உண்டாதல் வேண்டும். மேலதிக பனம் விதைகள் உள்ளவர்கள் எமக்குத் தந்தால், பரிசுகள் வழங்கப்படும். பனையபிவிருத்தி செய்ய விரும்புவோர் எமக்கு விண்ணப்பித்து விதைகளை இலவசமாகப் பெறலாம். பனை எங்கள் மூலவளம். பனைவளம் பெருகினால் தொழில் வளம் பெருகும்.

★ வாக்கினில் இனிமை வேண்டும் ★

# சுப்பிரமணிய பாரதியார்

(11-12-1882 — 11-9-1921)

## பிள்ளை பிறந்தது

தமிழ்நாட்டின் தென்பகுதியில் எட்டையபுரத்தின் சமஸ்தான வித்துவான் சின்னச்சாமி ஐயர் இயந்திரவியல், தொழில்நுட்பவியல் நிபுணர். அவரின் மனைவி இலட்சுமி அம்மாள் வயிற்றில் 11-12-1882 இல் தோன்றியவர் சுப்பிரமணிய ஐயர்.

சுப்பிரமணிய ஐயருக்குச் சுருக்கப்பெயர் சுப்பையா. செல்லப்பெயர் செல்லப்பா. ஐந்து வயதில் தாயை இழந்த பிள்ளைக்குத் தாயும் தகப்பனும் சின்னச்சாமி ஐயர். ஐந்து வயதில் தாயை இழந்த செய்தியை அவர் பின்னர் பாடியுள்ளார்.

''என்னை யீன்றெனக் கைந்து பிராயத்தில்
ஏங்கவிட்டு விண்ணெய்திய தாய்தனை''

## ஞானக்கண் பூண்டமை

சுப்பிரமணிய ஐயர் ஏழு வயதில் பூணூல் பூண்டு, உபநயனம் பெற்றார். சின்னச்சாமி ஐயர் மறுமணம் புரிந்து, விசுவநாதன் என்னும் ஆண்குழந்தையைப் பெற்றார். பின்னர் அவருக்குப் பெண்குழந்தை ஒன்று கிடைத்தது. சின்னச்சாமி ஐயர் மைந்தனுக்கு அடிப்படை வேதம் சொல்லிவந்தார். பிள்ளைக்குத் தமிழ்மொழியில் அதிக நாட்டம் உண்டானது.

## பாட்டாலே பேசிய குழந்தை

சுப்பிரமணிய ஐயர் எட்டையபுரத்துப் புலவர்களுடன் பாட்டாலே பேசிவந்தார். எதற்கும் எடுத்த எடுப்பில் பாட்டுப் பாடும் கவித்துவம் அவருக்கு வந்தது. மகனைக் கணிதப் புலியாக்க விரும்பிய தந்தை, மைந்தனின் தமிழ்ப் போக்கைக் கண்டு திகைத்தார். எட்டையபுரம் ஆங்கிலோ ஆரம்ப பாடசாலையில் தமிழ் வகுப்புகளின் பின், திருநெல்வேலி உயர்நிலைப் பாடசாலையில், தம்மிலும் மூவாண்டுகள் மூத்த பசுமலைச் சோமசுந்தரத்தோடு படித்தார். படித்த காலத்தில் தமிழார்வங்கொண்ட இருவரும் மறைவாகத் தேர்க்கொட்டகையுள் இருந்து தமிழ் நூல்களை ஆர்வத்தோடு படித்தனர்.

## பாரதிப் பட்டம்

இருவரும் பாட்டியற்றும் ஆற்றல் உள்ளவராயிருப்பக் கண்ட யாழ்ப்பாணப் புலவர் ஒருவர், அவர்களை வாழை, கமுகு என்பனபற்றிப் பாடச்செய்து, இருவருக்கும் பாரதி பட்டம் நல்கினார். இருவரும் சோமசுந்தர பாரதி, சுப்பிரமணியபாரதி ஆயினர்.

## சுப்பிரமணிய பாரதியார்

கலைமகள் கடாட்சம் பெற்றவர் என்னும் கருத்தில் பாரதிப் பட்டம்பெற்ற சுப்பிரமணிய ஐயர், பாரதியார் எனவே வழங்கிவந்தார், அவர் வரகவி, மகாகவி எனப் புகழ்பெற்றார். பாரதியார் என்னும் பட்டம் அவருக்கு முன்னும், அவர்காலத்திலும், அவருக்குப் பின்னும் பலருக்கு வழங்கியது. ஆனால் பாரதியார் என்றதும் அது சுப்பிரமணிய பாரதியாரையே குறிக்கிறது.

## பாரதி சின்னப்பயல்

சுப்பிரமணிய ஐயர் இளமையிலேயே பாடல் பாடித் திரிவதைக் கேட்டு மனம் புழுங்கிய காந்திமதி நாதன் என்பார், அவரைப்பார்த்து, ''எங்கே நீ புலவன் என்றால் பாரதி சின்னப்பயல் என்று ஈற்றில் வருமாறு பாடு பார்க்கலாம்'' என்றார். உடனே சுப்பிரமணிய பாரதியார் அருமையான தொடர்கள் கொண்டிழைத்த பாட்டின் இறுதியில் ''காந்திமதி நாதனைப் பார், அதி சின்னப்பயல்' எனப்பாடி அவரின் கொட்டத்தை அடக்கினார்.

(பார் அதி சின்னப்பயல் = பாரதி சின்னப்பயல்)

## திருமணம்

பாரதியாருக்கு 1897ஆம் ஆண்டில் பதினான்கு வயது அவருக்கும் ஏழுவயதுச் செல்லம்மாள் என்னும் பெண்ணுக்கும் திருமணம் நடந்தது. பாரதியார் படித்துவந்த காலத்திலேயே 1898ஆம் ஆண்டில் தந்தை சின்னச்சாமி ஐயர் காலமானார்.

## காசி நகரில் படிப்பு

தந்தையார் மறைந்த பின், அத்தை குப்பம்மாள் காசியில் வந்து படிக்குமாறு அழைப்புவிடுத்தார். பாரதியார் அங்கு சென்று அலகபாத் பல்கலைக்கழகப் பிரவேசத்துக்குப் படித்தார். அங்கே ஒருவருட காலத்தில் இந்தி மொழியை நன்கு கற்றுப் பிரவேச பரீட்சையில் திறமைச் சித்திபெற்றார். ஆங்கிலம் முதல்மொழி, இந்தி இரண்டாம் மொழி. அவர் இளமையிலேயே பன்மொழிப் புலவரானார்.

## ஆங்கிலப் புலமை

காசி நகர்ப்புறத்து வேதியர்கள் விசுவநாதர் ஆலயத்து உட்பிராகாரத்து மேடைகளில் வேதமோதக் கேட்டுப் பாடமாக்கிய பாரதியாருக்கு, ஆங்கிலப் புவவர்களான சேக்ஸ்பியர், ஷெல்லி, மில்ரன், பைறன் முதலானோரின் அரிய படைப்புகள் பாடம் வந்து புலமை உண்டாக்குவதில் தடையிருக்கவில்லை. காசியில் வாழ்ந்த காலத்திலே குடுமியை நீக்கி மீசை வளர்த்து வந்தார்.

## எட்டையபுரம் மீளல்

அலகபாத் பல்கலைக்கழகத்து F. A. என்னும் இடைநிலைத் தேர்வுக்குப் படித்துவந்த காலத்தில், பாரதியாருக்கு எட்டையபுர மன்னரின் அழைப்புக் கடிதம் கிடைத்தது. தாயகம் திரும்பிய பாரதியார், அரண்மனையில் உத்தியோகம் பெற்றார். இலக்கியரசனை உண்டாக்கி மன்னனை மகிழ்வித்தல் வேலை. சிற்றின்பப் பாடல்கள் சிந்துப் பாடல்களில் சிந்தைகொண்ட மன்னனுக்குப் பழைய சிந்துப் பாடல்களின் வழியில், புதிய சிந்துப்பாடல்கள் பாடி எல்லோரையும் திகைக்கவைத்தார்.

## ஷெல்லியன் கழகம்

பாரதியாருக்கு ஆங்கிலப் புலவர் ஷெல்லியின் படைப்புக்களில் அதிக பற்றிருந்தது. அதனால் அவர் ஷெல்லியன் கழகம் என்றொரு இலக்கிய வட்டம்கூட்டி இரசனையனுபவித்து வந்தார். ஷெல்லியன் கழகம் ஒரு இலக்கிய வட்டமாய் இயங்கியது.

★ நினைவு நல்லது வேண்டும் ★

## அச்சில் வந்த முதற்பாடல்

பாரதியார் எட்டையபுரத்துப் புலவர் கூட்டத்தில் நாயகமணியாகவிருந்து, நயமான புதுக்கவிதைகளை நிமிடந்தோறும் பாடிக் குவித்தார். ஒருசமயம் தனிமை இரக்கம் என்னும் தலைப்பில் அவர் பாடிய கவிதையை விவேகபானு என்னும் பத்திரிகை 1904ஆம் ஆண்டு யூலை மாதத்தில் வெளியிட்டது.

## தமிழாசிரியர்

மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் பண்டிதர் ஒருவருக்கு இடமிருந்தபோது, பாரதியார் அங்கு சென்று 1904ஆம் ஆண்டின் யூலை மாதம் தொடக்கம் தமிழாசிரியர் பணி மேற்கொண்டார். பெரிய இலக்கணப் புலிகள், இலக்கியப் புலிகள் செய்த வேலையைப் பாரதியார் இலகுவாக்கி நல்லபெயர் பெற்றார். நல்லாசிரியரானார்.

## சுதேசமித்திரன் உதவி ஆசிரியர்

சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராயிருந்த பாரதியாரின் திறமையை அறிந்த சுப்பிரமணிய ஐயர் என்னும் பெரியவர், தமது சுதேசமித்திரன் பத்திரிகையின் உதவிப் பத்திராதிபர் பதவியைப் பாரதியாருக்கு வழங்கினார். பாரதியார் 1904ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பத்திரிகையில் பணிசெய்யத் தொடங்கினார்.

## நமக்குத் தொழில்

சுதேசமித்திரன் உதவிப் பத்திராதிபரான பாரதியார், ''நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல். இமைப்பொழுதும் சோராதிருத்தல்'' என்று பாடியவாறு வேலையை ஏற்றார். அவரின் பன்மொழிப்புலமை பத்திரிகைத் தொழிலுக்குப் பெருவாய்ப்பாக இருந்தது. சம்பளம் போதாமையால் தனிவீடு எடுக்காமல், ஒட்டுக்குடியில் வாழ்ந்தபோது அவரின் அநுபவம் ஞானரதம் என உருவானது.

## சக்கரவர்த்தினி ஆசிரியர்

சுதேசமித்திரன் உதவிப் பத்திராதிபர் சுப்பிரமணிய பாரதியாரின் வீறுகொண்ட விறுவிறுப்பான தீவிரப் போக்கிலமைந்த எழுத்துக்கு நாட்டில் பெருமதிப்பு உண்டானது. அக்காலத்தில் அவர் சக்கரவர்த்தினி என்னும் மாதாந்தச் செய்தித்தாள் ஒன்றின் மதிப்புக்குரிய ஆசிரியராயும் இருந்தார். அவரின் எழுத்தாற்றலும் கவிதா சக்தியும் விறுவிறுப்பாக வளர்ந்தன.

## இந்தியா ஆசிரியர்

பாரதியார் பத்திராதிபராயிருந்த காலத்தில் பாரத நாட்டின் வைஸ்ரோய் என்னும் இராசப்பிரதிநிதி கார்சன் என்பார், வங்காளதேசத்தை இரண்டு பிரிவாக்கி மேற்கு வங்காளம், கிழக்கு வங்காளம் என இனவாரியாகப் பிரித்து, மேற்கில் இந்துக்களும் கிழக்கில் முஸ்லிம்களும் என வகுத்தார். இத்தகைய இனப்பிரிவையும் பிரதேசப் பிரிவையும் நாட்டு மக்கள் கடுமையாக எதிர்த்தனர், கண்டித்தனர். பாரதியார் இச்செயலை வன்மையாகக் கண்டித்துக் கிண்டலாக எழுதி வந்ததை, மிதவாதப் போக்குடைய சுதேசமித்திரன் சூழல் விரும்பவில்லை. எனவே கொள்கையை விட்டுக்கொடுக்க விரும்பாத பாரதியார், வேலையைவிட்டு விலகிக்கொண்டார். பாரதியார் தீவிரமான போக்குடையவர்.

## பெரியவர்கள் பக்கபலம்

புரட்சிகரமான போக்குள்ள பாரதியாருக்குப் பெரியவர்களான வ. வே. சு. ஐயர், வ. உ. சி. பிள்ளை, சுப்பிரமணிய சிவா முதலானோர் பக்கத்துணையாயிருந்தனர். தேசபக்தர் திருமலாசாரியார் நடத்திவந்த இந்தியா என்னும் பத்திரிகையைப் பாரதியார் பொறுப்பேற்றார். திருமலாசாரியரும் கிருஷ்ணமாசாரியரும் வேண்டிய பொருட்செலவு செய்தனர்.

இந்தியா பத்திரிகையைப் பொறுப்பேற்றதும் அதன் மேலுறையைச் செந்நிறத்தாளாக்கிப் பாரதியார் விறுவிறுப்பாக வெளியிட்டுவந்தார். திலகர், அரவிந்தர், விபன்பாபு, தாகூர், சுரேந்திரர், தாதாபாய், லஜபதிராய், முதலானோர் பாரதியாருக்கு அரண்செய்தனர்.

## இரகசியச் சூழல்

தமிழ் பொறிபறக்க விடுதலையுணர்ச்சியை வீறுகொண்டெழச் செய்து, விறுவிறுப்பாகப் பாரதியார் எழுதியவற்றை அரசாங்கம் கழுகுக் கண்ணுற் கண்டு, இராஜவிழி விழித்தது. அபிமானிகள் அச்சங் காரணமாக இந்தியா பத்திரிகையை இரகசியமான சூழலில் படித்துவந்தனர்.

பாரதியார் வடக்கே வந்தே மாதரம்போன போக்கில் தெற்கில் வீரசுதந்திரம்கோரி, வீரருக்கு வழிகாட்டி வந்தார். சிரிக்கவைத்துச் சிந்திக்கத் தூண்டும் கேலிச் சித்திரங்கள் இந்தியா பத்திரிகையை அலங்கரித்தன. பத்திரிகை விடுதலை வீரரின் கேடயமாயிற்று.

## நிவேதிதை புகட்டிய பாடம்

சுவாமி விவேகானந்தரின் மாணுக்கியரான வெள்ளைக்காரப் பெண் இந்து சமயத்தில் சேர்ந்ததும், சகோதரி நிவேதிதை எனப் பெயர் பெற்றார். அவர் ஞானிகள், துறவியர், தவத்தினர்க்கும் பாடம் சொல்லுமளவில் பாரத தர்மத்தைப் பயின்றிருந்தார். பாரதக் குழந்தைகளுக்குப் பண்பாட்டுக் கதைகளைத் தொட்டிற் பருவத்தில் கேட்கச் சொன்னவர். (Cradle stories of Hindu Religion)

நிவேதிதையிடம் பாரதியார் படித்த பாடங்கள், சுதந்திர பாரதத்துக்காகப் பாடுபடுதல், சாதிபேதத்தை ஒழித்தல், பெண்கள் முன்னேற்றத்துக்கு ஆவன செய்தல் என்னும் மூன்றுமாம்.

## நிவேதிதைக்குச் சமர்ப்பணம்

பாரதியார் 1905ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் காசியில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்திற் கலந்துகொண்டபின், கற்கத்தா சென்று நிவேதிதையை கண்டு வணங்கி உரையாடினார். அவரைத் தம் ஆத்மகுருவாக மதித்தார். அவரைச் சக்தியின் அவதாரம் எனக் கருதித் துதித்தார். அவர் தமக்குச் சொல்லாமல் சொன்ன உபதேசங்களை உளங்கொண்டார். தம் தேசியப் பாடல் தொகுப்புகள் இரண்டை அவருக்கே சமர்ப்பித்தார். அவரைப் போற்றினார்.

★ தனமும் இன்பமும் வேண்டும் ★

## நிவேதிதாவைத் துதித்தமை

அருளுக்கு நிவேதனமாய், அன்பினுக்கோர்
கோயிலாய், அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிறாய் எமதுயர்நா
டாம்பயிர்க்கு மழையாய், இங்கு
பொருளுக்கு வழியறியா வறிஞர்க்குப்
பெரும் பொருளாய்ப் புன்மைத் தாதச்
சுருளுக்கு நெருப்பாகி விளக்கிய தாய்
நிவேதிதையைத் தொழுது நிற்பேன்.

## திருவல்லிக்கேணியில் தீவிரப்போக்கு

தமிழ்நாட்டில் திருவல்லிக்கேணிக் கடற்கரையில், திலகர் கட்டடத்தில் வங்காளப் பெரியாரான விபின் சந்திரபால, 2-5-1907 தொடக்கம் சுதந்திரதாகத்தையும் புரட்சி மனப்பான்மையையும் ஊட்டிப் பேசிவந்ததைக் கேட்ட பாரதியார், சுரேந்திரநாத் ஆர்யா, சர்க்கரைச் செட்டியார், துரைசாமி ஐயர், கிருஷ்ணசாமி சர்மா, பகவந்தம் குப்தா முதலானோர் வெகுவாகச் சூடேறினர் கள். தீவிரப்போக்கில் வீரநடை நடந்தார்கள்.

## சூடேறிய தேசபக்தி

பாரதியாருக்குத் தேசபக்தி சூடேறியது. பாடிப் பாடிப் பேசினர் - எழுதினர்.

''சென்ற சுபகிருது வருஷத்திலே பாரத நாட்டில், சர்வசுபங்களுக்கும் மூலாதாரமாகிய தேசபக்தி என்ற நவீனமார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தையெல்லாம் உடனே புனிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறைவுடையவனாகிய யானும் தேவியினது கிருபையால் அப்புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன். அவ்வன்பு காரணமாகச் சென்ற வருஷம் சில கவிதை மலர்புனைந்து, மாதாவின் திருவடிகளுக்குப் புனைந்தேன்.''

## தீவிரவாதம்

பாரதியார் என்றுமே தீவிரவாதப் போக்குள்ளவர். ஆனபடியால்தான் அவர் மிதவாதப்போக்குள்ள சுதேச மித்திரன் பத்திரிகைத் தொடர்பைவிட்டு விலகினார். இவ்வாறாக 1906ஆம் ஆண்டில் சூரத் நகரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் மிதவாதிகள் வேறாகவும் தீவிர வாதிகள் வேறாகவும் பிரிந்தனர்.

பாரதியாரின் தீவிரவாதத்தில் லாலா லாத்பத்ராய், அரவிந்தகோஷ், பாலகங்காதர திலகர் முதலானோர் முன் னரே ஈடுபட்டிருந்தனர். அவர்கள் எல்லோரும் இப்போது ஒரு கூட்டமாயினர். தீவிரவாதிகளுட் சிலர் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டும் சிறைவைக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டனர்.

நாட்டில் நிலவிய கொந்தளிப்பில் பத்திரிகையாசிரி யர் பலர் கைது செய்யப்படலாம் என்றும், பாரதியா ருக்கும் கைவிலங்கு மாட்டப்படலாம் என்றும் பலர் பேசிக்கொண்டனர்.

மணியாச்சி என்னும் இடத்தில் ஆஷ் என்பார் கொலை செய்யப்பட்டார் என்றும், கொலைஞர்களிடம் பாரதியாரின் பாடல்கள் இருந்தன என்றும் வதந்திகள் பரவின. நண்பர்கள் அன்பர்கள் பாரதியாரைப் புதுச் சேரிக்குப் போகுமாறு பணிவன்புடன் வற்புறுத்தினர்.

## புதுச்சேரியில் சுதந்திர வாழ்வு?

பாரதநாட்டின் ஒரு பிரதேசமான புதுச்சேரி பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமாயிருந்தது. பிரெஞ்சுக் காரர் 1789ஆம் ஆண்டில் தங்கள் நாட்டில், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் மூவர்ணக் கொடி உயர்த்தியவர்கள்.

பாரதநாட்டில் சுதந்திரம் கேட்டவர் அடிபட்டும் உதைபட்டும், பல்லிழந்தும், சொல்லிழந்தும், புகழிழந் தும், பொருளிழந்தும் பாடுபட்டுப் புதுச்சேரியுள் புக லடைந்தார்கள்.

தம்மைக் கைது செய்யப் போகிறார்களாம் எனக் கேள்விப்பட்ட பாரதியார் 1908ஆம் ஆண்டில் புதுச் சேரியுள் புகுந்தார். தேசபக்தர்கள், தீவிரவாதிகள் வந்தே மாதரகோஷக்காரர் அவரைச் சூழ்ந்துகொண்டார்கள்.

## பதஞ்சலி யோகசூத்திரம்

பாரதியார் வடமொழியிலிருந்து தமிழில் பெயர்த்துப் பாடிய பாடல்கள் வேதங்கள், வேதாங்கங்கள், உபநிடத சூத்திரங்கள், பகவத்கீதை முதலியனவாகும். பாரதியார் இளமையிலேயே வடமொழியை நன்றாகப் படித்தவர். காசியில் அத்தையார் வீட்டில் வாழ்ந்த காலத்தில் விசுவ நாதர் கோயிற் பிராகார மேடைகளில் அந்தணர்கள் வேதமோதக் கேட்டுப் பழகியவர். அவற்றைத் தமிழகத் தில் காஞ்சியில் இருந்தே கேட்பதற்குக் கருவியமைக்க ஆசை கொண்டவர். புதுச்சேரியில் வேதம் வல்ல அரவிந் தர் தம் தீவிரவாதப் போக்கை விடுத்து ஞானமார்க்கத்தில் ஒழுகியபோது, அவரோடு கூடிப்பழகினார். அரவிந்தர் அக்காலத்தில் கர்மயோகின் என்னும் பெயர்பெற்ற பத்திரிகையை நடத்திவந்தார். பாரதியார் அதனைக் கருத் தூன்றிப் படித்து, அதன் வேகமும் தரமும் குறையா வண்ணம் தமிழில் கர்மயோகி என்னும் பத்திரிகையை நடத்திவந்தார். அதிலேதான் அவர் பதஞ்சலி யோக சூத்திரத்தை அருமையாக மொழிபெயர்த்து வெளியிட்டு வந்தார். பாரதியார் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வகை நெறிகளையும் நன்கறிந்தவர்.

## பகவத்கிதை

வடமொழியிலுள்ள முப்பெரு நூல்களிலொன்றாகிய பகவத்கீதையைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் அநேகர் மொழிபெயர்த்திருக்கிறார்கள். ஆனால் பாரதியார் மொழி பெயர்ப்பில் அமைந்த சொற்சித்திரமும் சிக்கனமும் சிறப்பும் சுருக்கமும் வேறெந்த வித்வான்களின் மொழி பெயர்ப்பிலும் அமையவில்லை. திருக்குறள் போன்று சுருங்கச்சொன்ன சிறப்பும் கருத்திறுக்கமும் பாரதியார் மொழிபெயர்ப்பில் உண்டு.

## துயர்க்கடலில் துக்கம் இல்லை

பாரதியாருக்குத் துன்பங்கள், துயர்கள் அலை அலையாக வந்து, அவர் துன்பக்கடலில் கிடந்தது உண்டு. அப்போதெல்லாம் அவர் தம்மைத் தேவி பராசக்தியிடம் ஒப்படைத்திருந்த வலிமையால் தேவி அவருக்குத் தோணியாயினள். அவர் துக்கம் அடையவில்லை. தம்மைப்பற்றிய இன்னல்களைச் சமூகத்தவரிடம் கருணையாக அவர் பாவனை செய்து பணி புரிந்தார். துயர்க்கடலில் துக்கம் இல்லாமல் வாழ்ந்தமை பாரதியாரின் வாழ்க்கை இரகசியம். தெய்வ நம்பிக்கை. தெய்வத்திடம் தம்மை ஒப்படைத்தமை.

## பாரதியாரின் கண்ணன் பாட்டு

திருமாலுக்கு அடிமை செய் என்பது ஒளவையாரின் அமுதவாக்கு. ஆழ்வார்களின் அருளிப்பாடுகளில் தோய்ந்த குவளையூர் கிருஷ்ணமாசாரியார் பாரதியாரின் நண்பன். குவளைக்கண்ணன் எனச் செல்லமாக அழைத்து வரப் பெற்ற நண்பனின் சகவாசத்தால், பாரதியார் பெரியாழ்வாரின் பாசுரங்களில் பெரிதும் ஈடுபட்டுவந்தார்.

கண்ணன் பாட்டில் இருபத்துமூன்று பாடல்களில் கண்ணன் தந்தையாக, பிள்ளையாக, காதலனாக, காதலியாக, நண்பனாக, ஆண்டானாக, அடிமையாக வருகின்றான். இத்தகைய வருகைக்கெல்லாம் பாரதியாரின் பாவனையே காரணம். பக்தியே அடிப்படை. கண்ணன் காதலியாக வரும் பாவனையில் கண்ணம்மா. ''கண்ணம்மா என் குல தெய்வம்'' என்பது பாடலின் உச்சம்.

## பாரதியாரின் அபிமானமும் அபிலாசையும்

பாரதியாரின் அபிமானம் அபிலாசை என்பன பல கோணங்களில் அமைந்தவை. தமிழபிமானம், தாய்நாட்டபிமானம், சுதந்திரதாகம், கலையபிமானம், தொழிலபிமானம், சகோதரத்துவம் முதலிய சிறந்த குணங்கள் அவருக்கு இளமையிலேயே உண்டானவை. அவற்றை வளரச்செய்யவேண்டும் என்பதே அவரின் அபிலாசை.

## குறுகிய காலத்தில் பெருகிய பாடல்கள்

பாரதியார் 1882 தொடக்கம் 1921 வரை முப்பத்தொன்பது ஆண்டுகள் வாழ்ந்தவர். அவர் பத்தாம் வயதளவில் பாடத்தொடங்கிய போதிலும், பதினெட்டாம் வயதின் பின்னரே பெரும் புலமை பெற்றுப் பாடத்தொடங்கினார். அவர் இருபது ஆண்டுகளுள் ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ளார்.

## குழந்தைப் பராயத்தில் பாடிய கமுகு

சுப்பிரமணிய ஐயர் பள்ளி மாணாக்கனாயிருந்த காலத்தில் ஒரு ஆலயத்துத் தேர் மண்டபத்தில் மறைந்திருந்து தமிழ்ப் புத்தகங்களை விரும்பிப் படிப்பாராம். தந்தை சின்னச்சாமி ஐயர் மகனை எஞ்சினியராக்க விரும்பினாராம். சுப்பிரமணியம் இளமையிலேயே பாட்டுப்பாடுவதைக் கண்ட யாழ்ப்பாணத்து அறிஞர் கமுகு என்பதைப்பற்றிப் பாடச் சொல்லிக் கேட்டுப் பாரதிப் பட்டம் கொடுத்தாராம். சோமசுந்தர பாரதியார் வாழை பற்றிப் பாடினார் என்பர்.

## பாரதியாரின் புகழ்பரப்பியவர்

பாரதியாரின் பாடல்களில் உயிர்த்துடிப்பு உண்டு என்று கண்டு, அறிஞர்களின் மேடைகளில் அற்புதமாகக் கையாண்டு பேசியவர்கள் வரிசையில் முதலிடம் பெற்றவர் முன்னைநாள் அண்ணாமலை முதற்றமிழ் பேராசிரியர் விபுலாநந்த அடிகளாவர். துறவியும் பேராசிரியருமான விபுலானந்தர் பேசக்கேட்டதும், பெரியவர்கள் பலர் பார்தியாரின் பாடல்களை வெகுவாகச் சுவைக்கத் தொடங்கினார்கள்.

## பாரதியாரின் ஞானகுரு

பாரதியார் தமது பாரதநாட்டுப் பலவாய பிரதேச வாழ்விலும், அஞ்ஞாத வாழ்விலும் கண்ட ஞானிகள், தபசிகள், துறவியர் பலருள், பருத்தித்துறை அருளம்பலம் என்பவரையே பெரிய ஞானகுருவென வெகுவாக வியந்து பாடியுள்ளார். அன்றி, யாழ்ப்பாணத்தைக் குவலயத்தின் விழி எனவும் போற்றியுள்ளார்.

யாழ்ப்பாணச் சாமியின் புகழ்பாடிய பாரதியார், அவரை தேவிபதம் மறவாத தீரஞானி என்றும், சிதம்பரத்து நடராசமூர்த்தி என்றும், பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி என்றும், மங்களஞ்சேர் திருவிழியான் என்றும், யாழ்ப்பாணத்து ஈசன் என்றும் பாடுவர். அவரைப் பூந்தோட்டத்துச்சாமி, மௌனசாமி என்றெல்லாம் மக்கள் போற்றினர்.

## பாரதியார் கண்ட கனவின் பலன்

பாரதியார், ஜவஹர்லால் நேரு போலப் பலவிதமான உயர்ந்த லட்சியக் கனவுகள் கண்டவர். நேரு தாம் அடிக்கடி ஆகாயத்தில் பறப்பதாகக் கனவு கண்டதாக எழுதியுள்ளார். அவருக்கு உலகளாவிய புகழ்வருவதைக் குறித்தனவாக அவரின் இளமைக்காலக் கனவுகள் இருந்தன எனலாம்.

பாரதியார் கண்ட கனவுகள் பலவற்றை அவர் இலட்சியமாகக் கொண்டு பல பாடல்கள் பாடியுள்ளார். அவரின் கனவுகளுக்கு உரிய பலன் சொன்னவர் யாழ்ப்பாணத்துச் சுவாமி என்பர். யாழ்ப்பாணச் சுவாமி பாரதியாருக்குப் புதுச்சேரியில் பலவிதமாகப் பக்கத்துணையிருந்தவர். பெரிய பக்குவி மௌனத்தில் ஒதுங்கி ஒடுங்கி வாழ்ந்த பக்குவியான யாழ்ப்பாணச் சாமி, பாரதியாரின் பரிபக்குவ முதிர்ச்சி நோக்கியே அவரோடு வாய்விட்டு உரையாடினார் போலும்.

## பர்ரதியாரின் பற்றும் பாடலும்

பாரதியார் மொழிப்பற்று, சமயப்பற்று, சமூகப்பற்று, நாட்டுப்பற்று, சுதந்திரப்பற்று நிறைந்தவர். அவர் மொழிப்பாடல், சமயப்பாடல், சமூகப்பாடல், நாட்டுப்பாடல், சுதந்திரப்பாடல் முதலிய பலவிதமான பாடல்களைப் பாடினார். அவர் எந்தத்துறையினைப் பாடினாலும் அதில் கனிவு, கவிதாதர்மம் கலந்திருக்கும்.

## ஞானப்பாடல்

பாரதியாருக்குப் புதுச்சேரி வாழ்க்கை பெரிய ஞானியர், துறவியர், சித்தர்கள், யோகியர் தொடர்பைக்

★ காரியத்தில் உறுதி வேண்டும் ★

கொடுத்தது. அவர் பெரியவர்களுடன் கலந்துரையாடிய காலத்தில் அவரின் உள்ளத்தில் எழுந்த ஞானக்கனல் முறுகி முறுக்கேறி மூண்டு எரிந்து ஞானப்பாடல்களாக வெளிவந்தன. எரிமலை கக்கியவண்ணம் அவர் சூடான பாடல்களைக் கக்கினார்.

பாரதியாரின் ஞானப்பாடல்கள் வரிசையில் விநாயகர் முருகன், சக்தி, கண்ணன், திருமகள், கலைமகள், மலை மகள், சூரியன் முதலிய தெய்வமூர்த்தங்களைக் குறித்தவை பன்னூற்றுக்கணக்கானவை.

"நல்லகீதம் சிவத்தனி நாதம்
நடனஞானியர் சிற்சபை யாட்டம்
அல்லல்போக இவருடன் சேர்ந்தே
ஆடி யாடிப் பெருங்களி கொள்வோம்
சொல்ல நாவில் இனிக்கு தடாவான்
சுழலும் அண்டத் திரளின் சுதியில்
செல்லும் பண்ணொடு சிற்சபை யாடும்
செல்வம் போலொரு செல்வமிங் குண்டோ?'

## பாரதியாரிடம் சுகம் விசாரித்தவர்கள்

பாரதியாரிடம் குசலம் விசாரித்த பெரியவர்கள் படித்தவர்கள், செட்டிமார், சட்டத்தரணிகள், துறவியர் பலர். ஆனால் அவர் புதுச்சேரியில் பொதுமக்களோடு மிகநெருங்கிய தொடர்புகொண்டு அவர்களோடு தாமும் ஒருவனாக வாழ்ந்தவர்.

புதுச்சேரியில் பாரதியாரை அடிக்கடி சுகம் விசாரித்த பொதுமக்களுள் வெற்றிலை வியாபாரிகள், குடுகுடுப்பைக் காரர், கிளிச்சாத்திரம் சொல்வோர், கைரேகை பார்ப் போர், கடலைக்காரர், பிச்சைக்காரர், வைர வியாபாரிகள் முதலானோர் பலர். இவர்களின் முகபாவனைகளை ஒரு நொடியில் மட்டிட்டு இவர்களின் கண்ணிற் படாமல் மறைந்துவிடும் சாமர்த்தியம் பாரதியாருக்கு இருந்தது. காரணம் இத்தனைபேரும் மாறுவேடம் பூண்ட பொலிசுக் காரர் என்பது பாரதியாருக்கும் வேடதாரிகளுக்குமே தெரியும்.

## சக்திதாசனும் காளிதாசனும்

பொலிசுக்காரர் மாறுவேடம் பூண்டு பாரதியாரை வட்டமிட்ட காலத்தில், பாரதியாரும் சிலசமயம் பெரிய பொட்டுப்போட்டு வேறு கோலம் புனைந்து, சக்திதாசன் என்றும் காளிதாசன் என்றும் தம் பெயர் வழங்க நட மாடிப் பொலிசுக்காரர் கண்ணில் பொடிதூவியதும் உண்டு. வேட்டை நாய்கள் மோப்பம்பிடிக்காதவாறு பாரதியார் வேடங்கள் பலித்தன.

## மொழிபெயர்ப்பு நிபுணர்

பாரதியார் பன்மொழிப் புலவர். அவர் தாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழியே இனிமையானது என்று துணிவாகக் கூறக்கூடிய தகுதிபெற்றவர். அவர் வட மொழியினின்றும், ஆங்கிலத்தினின்றும் பெரியவர்களின் படைப்புக்களைப் பொதுமக்கள் படித்தறியும் வண்ணம் தமிழில் இலகுவாக மொழிபெயர்த்து வெளியிட்டார். அவரின் மொழிபெயர்ப்பில் மூலபாடங்களின் வீரம், இன்பம், துன்பம், சாந்தம், சீற்றம் சிதைவுபடாமல் மொழிபெயர்ப்பிலும் நடஞ் செய்யும். தம் தமிழ் மொழி பெயர்ப்பால் தமிழுக்குப் புதுநடையொன்றை அவர் கற்பித்துள்ளார். அது பாரதியாரின் கொடை. அவரின் உபகரிப்பு.

## நாட்டை ஆண்ட தேசியப் பாடல்கள்

பாரதியார் தமது இந்தியா என்னும் பத்திரிகையில் ஆங்கிலேய அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்து வந்தார். தமிழ் பேசும் மக்களைச் சுதந்திரப் போரில் ஈடுபடுமாறு உணர்ச்சியூட்டிவந்தார். அவரின் உணர்ச்சிக் கவிதைகளைத் தாங்கிய இந்தியா பத்திரிகையின் அடுத்த இதழ் எப்போது வெளிவரும் என மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். ஆங்கில அரசாங்கம் அந்தப் பத்திரிகை புதுச்சேரி மாநிலத்தை விட்டுத் தங்கள் பூமிக் குள் புகாதவாறு காவல் போட்டிருந்தனர். தடுப்புக் காவலையும் திகைக்க வைத்துப் பத்திரிகை இந்தியாவுட் புகுந்தே வந்தது. இதைக்கண்ட அதிகாரிகள் பிரமிப் படைந்து அழாத குறையாய் "பாரதியாரின் தேசிய பாடல் நாட்டை ஆள்கின்றது" என்று கூறினர். அவர் களால் வேறெதுவுஞ் செய்ய முடியவில்லை.

## புதுச்சேரி தந்த புதுவெள்ளம்

ஆங்கிலேயர் ஆட்சியின் கெடுபிடிகளினின்றும் ஒய்ந்து ஒதுங்கியிருப்பதற்காகப் பாரதியார் புதுச்சேரிக்குட் புகுந்து, 1908 ஆம் ஆண்டு முதல் 1918 ஆம் ஆண்டு வரையும் அங்கே ஓரளவுக்குச் சுதந்திரமாக வாழ்ந்தார். அக்காலத்திலேதான் அவரின் தேசபக்திப் பாடல்களும், ஞானப் பாடல்களும் புதுவெள்ளம் போலப் பெருகி வளம் பெற்றன.

## செட்டிமார் கொடுத்த ஊக்கம்

தமிழ் நாட்டிலும், ஈழநாட்டிலும், மலேசியா, சிங் கப்பூர் முதலிய வெளிநாடுகளிலும் வர்த்தகர்களாயும் வணிகர்களாயும் வாழ்ந்த செட்டிமார்கள் தமிழ் வளர்ப் பதில் பெரிதும் ஈடுபட்டிருந்தனர். புதுச்சேரியில் வளம் பெற வாழ்ந்து வந்த செட்டிமார் பலர் பாரதியாருக்கு நண்பர்களாயினர், சீடராயிருந்தனர். பாரதியாருக்குத் தங்கி வாழ வீடு கொடுத்தவர்களும், கடன் கொடுத்த வர்களும், உடனுக்குடன் பத்துரூபா இருபது ரூபா கொடுத்துப் பாட்டுப்பாட ஊக்குவித்தவர்களும் செட்டி மார்களே. செட்டிமார்களின் வண்டி தொந்தி உடலமைப் பைக் கொண்டு பாரதியார் பட்டப் பெயர் சூட்டி நகைச் சுவையாக வழங்கிய போதும், செட்டிமார் பாரதியாரி டம் கோபிக்காது புன்முறுவலுடன் அன்புகொண்டொழு கினர். பாடப்பணித்தனர்.

## பிரெஞ்சுப் பொலிசாரின் பாராட்டு

புதுச்சேரியில் பொலிசு வேலையில் மேலதிகாரிகளாயி ருந்து பிரெஞ்சுக்காரர் சில சமயம் வெளியுலா சென்று வேவுபார்ப்பதும் உண்டு. அவர்கள் அரவிந்தரின் படிப் பகத்தில் லத்தீன், கிரேக்க நூல்கள் இருப்பக் கண்டு, பெரியபடிப்பாளி என மதித்துப் போயினர்.

★ மண் பயனுற வேண்டும் ★

பாரதியாரின் படிப்பறையுட் புகுந்த அவர்கள் அங்கே காகிதக் கட்டுகளை கிளறி அவையாவும் புதுப் பாட்டுகள் என்று புன்முறுவல் பூப்பச் சொல்லி மதித்துப் போயினர். பெரியவன் பெரியவனதான், எனப் பாரதியாரும் பூரித்திருந்தார்.

## ஆபிரிக்கா அனுப்பிய ஆயிரம்ரூபா

தென்ஆபிரிக்காவில் வாழ்ந்த தமிழருள் ஒருவர், பாரதியாரின் பாடல்களைப் படித்துப் பரவசப்பட்டு, அவருக்கு ஆயிரம்ரூபா அபிமானங்காரணமாக அனுப்பினார். பாரதியாருக்கு ''ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை இந்த நாட்டினில்'' என்ற சர்வோதயப் பாடல் வாயில் வந்தது. பாடிப்பாடி அந்தப் பணத்தை ஏழைகளுக்கும் பிச்சைக்காரருக்கும் பங்கிட்டுக் கொடுத்துத் தாம் அரைப் பட்டினியாக வாழ்ந்தார். அது அவரின் இயல்பு. சிவநேயச் செல்வர்களாய நாயன்மார் காட்டிய நல்வழி.

## பாரதியாரின் பாரதாம்பிகை

பாரதியாருக்கு 1906 ஆம் ஆண்டு தை மாதத்தில் ஒரு நாள் தேசபக்தி உச்சநிலையடைந்தது. இமயம் முதல் குமரி வரையுள்ள பெரு நிலப்பரப்பு ஒரு பெரும் நாடு என்று கண்டார். பாரதாம்பிகை என்று பலமுறை கூறித் தோள்கொட்டிப் பாடினர்.

பாரத தேசம் எனப் பெயர் பெற்ற நாட்டில் 1906 முதல் 1920 வரையும் உள்ள காலம், வடக்கில் திலகர் யுகம், தெற்கில் பாரதியுகம் என்று விடுதலை வீரர் விளம்பினர். தமிழில் தேசபக்திப் பாடல் பாடிய முன்னோடி பாரதியாரேயாவர். அது அவரின் யுகந்தானே.

வடக்கில் அரவிந்தரின் வந்தேமாதரம் என்னும் பத்திரிகையும், தெற்கில் பாரதியாரின் இந்தியா என்னும் பத்திரிகையும் விடுதலை வீரருக்குப் பெருவிருந்தாயிருந்தன. பாரதியாரின் பத்திரிகைக்கு விடுதலை வீரர் வ. வே. சு. ஐயர் விடயதானம் செய்து வந்தார். அவர் லண்டனில் இரகசியப் பொலிசுக்காரரைத் திசைதிருப்பிவிட்டு, புதுச்சேரியுட் புகுந்தவர்.

## ஆரியசம்பத்து தேசிய சொத்து

பாரத நாட்டின் பண்பாட்டுக்கு அதிகமாகப் பேசப்பெறும் வேதம் முதலாய பெருஞானக் களஞ்சியங்களைப் பாரதியார் ஆரிய சம்பத்து என்றே பாடுவர். அவற்றைத் தேசிய சொத்து என்று பெருமைப்படுவர். பாரதியாரின் தேசியத்தில் தமிழ் இன்றியமையாத ஒரு கலப்பு. தமிழ் கலக்காத தேசியம் தேசியமாகாது. பாரதியாரின் வெண்ணிலா பாட்டு தேசபக்தியின் சிந்தனையுருவமாகும்.

## ஸ்வதேச கீதங்கள்

பாரதியார் 1908 ஆம் ஆண்டில் தாமே வெளியிட்ட ஸ்வதேச கீதங்கள் என்னும் தொகுப்பு நூலில் வந்தே மாதரம், நாட்டு வணக்கம், எங்கள் நாடு, சுதந்திரப் பெருமை, புதுவருஷம் முதலிய 14 பாடல் தலைப்புகள் அடங்கி இருந்தன. அவை வெளிவந்தபோது பத்திரிகைகள் பலவிதமாக அவற்றைப் பாராட்டி எழுதின. செந்தமிழ் என்னும் பத்திரிகை வெகு உச்சமாகப் புகழ்ந்தது.

## செந்தமிழ் போற்றிய பாரதியாரின் சுவதேச கீதங்கள்

தமிழகத்து மதுரை மாநகரின் தமிழ்ச் சங்கத்திலிருந்து மாதாந்தம் வெளியான செந்தமிழ் என்னும் மகத்தான பத்திரிகையில், செந்தமிழ்ச் சிங்கங்கள் எனப் புகழ் பெற்ற ரா. ராகவையங்கார், மு. ராகவையங்கார், திரு. நாராயணஐயங்கார் முதலானோரும்; ஈழத்தின் பெரும் புலவர்களான சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், மகாவித்துவான் கணேசையர், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் முதலானோர் முறையாக எழுதிவந்தார்கள். இத்தகைய புகழ்பூத்த பத்திரிகை பிலவங்க வருடம் மாசி மாதம், 1908 பெப்ருவரியில் சுப்பிரமணியபாரதியாரின் சுவதேச கீதங்கள் என்னும் நூலைப்பற்றி விமர்சனம் செய்திருந்தது.

''சுவதேச கீதங்கள்-இப்பெயர் கொண்ட பாடற்றிரட்டொன்று சென்னையினின்றும் சிறக்க வெளிவரும் இந்தியா பத்திராதிபர் ஸ்ரீ. சுப்பிரமணிய பாரதியாரவர்களால் இயற்றி வெளியிடப்பட்டது. இதன் பெயரைக் கேட்கும் போதே, இத்திரட்டு நம்மவர்க்கு ஒரு புது வழியைக் கற்பிக்க வந்ததென்பது விளங்கும். நம் தமிழ் மொழியில், ஈசுவரசம்பந்தமான பாடல்களும், காவியங்களும், புராணங்களும் பிறவும் நிரம்பவுண்டாயினும், நம்மவர்க்குத் தற்காலம் இன்றியமையாது வேண்டத்தக்கனவும் தேசாபிமானத்தை உண்டாக்க வல்லனவுமான உயர் கவிகள் கிடைத்தில. வங்காள நாட்டார், இந்திய மக்கள் ஏனையவரினும் விசேடமான தேசாபிமானமும் உள்ளக் கிளர்ச்சியும் பெற்றிருப்பதற்குரிய முக்கிய ஏதுக்களுள் ஒன்று, அந்நாட்டில் சமீபத்திற்றோன்றிய கவிஞர் சிகாமணிகளது அருமை பெருமை வாய்ந்த தேசிய கீதங்கள் அந்நாடெங்கும் பரவிப் பேரெழுச்சியை உண்டாக்கி வருதலாம். மேனாட்டார்கள் எல்லாம் நம் நாட்டுக் கவிஞர்களியற்றிய தேச கீதங்களைப் பாராட்டிப் போற்றி வருதலை இயற்கையாகவுடையராய் விளங்குதலும் காணலாம். அத்தகைய பாடல்களுங் கீதங்களும் தமிழ்மக்கட்கும் இன்றியமையாதனவாயிருத்தலோடு, அவை நாடெங்கும் பரவி ஊக்கத்தை விளக்கக் கூடியனவாயுமிருத்தல் வேண்டும்.

சிற்சிலர் சுதேசமித்திரன், இந்தியா முதலிய பத்திரிகைகளில் அவ்வப்போது வெளியிட்ட சுதேசியப் பாடல்கள் மிகவுயர்ந்தனவாயிருத்தல் கண்டு, அவையாருமறியத் திரட்டித் தொகுக்கப்படின் பெரிதும் உபயோகமாம் என்று கருதியதுண்டு. இப்போது, பாரதியார் தாமியற்றிய தேசகீதங்களைத் திரட்டிச் சிறுபுத்தகமாக வெளியிட்டிருப்பது எமக்குப் பெருமகிழ்ச்சி விளைத்தது.

இவர்கள் வந்தே மாதரம், நாட்டு வணக்கம், எங்கள் நாடு, பூபேந்திர விஜயம், கிளிக் கண்ணிகள் முதலாக அநேக விஷயங்களைப் பற்றிப் பாடியிருக்கும் செய்யுள்களும் கீதங்களும் சொன்னயம், பொருணயங்களுடையனவாயிருத்தலோடு, படிப்போர் மனதில் எழுச்சியை உண்டாக்க வல்லனவாகவும் விளங்குகின்றன. இயற்கையில் இனிய பாடல்கள் பாடவல்ல பாரதியார் தம் சக்தியை

இத்தகைய புதுவழியில் திருப்பி உபயோகப்படுத்தியிருப்பது, நம்மவர்க்கு ஒரு நல் வழியைக் கற்பிக்கின்றது.

இத்தகைய கீதங்களை, தேசாபிமானிகளான நந்தமிழ் நாட்டாரெல்லாம் படித்து மகிழ்வதுடன், முக்கியமாகத் தம் மக்கட்கு இவற்றை மனப் பாடம் பண்ணும்படி செய்வித்தல் மிகவும் வேண்டப்படுவது என்போம்.

இது போலவே நம் நாட்டுப் பெண்பாலாரெல்லாம் விரும்பி மனப் பாடம் பண்ணிக் கொள்ளற்கேற்றபடி, கும்மி முதலான கீதங்களை அமைத்து வெளியிடுதல் மிக்க பயனளிக்கக் கூடியது. பெண்பாலாரிடம் அத்தகைய பாடல்கள் பரவுதல் எளிதாயிருப்பதோடு அதனுலுண்டாகும் நன்மைகளும் அனந்தமாம்.

பாரதியாரவர்களும் அவர்களையொத்த தேசாபிமானிகளும் இது விஷயமான முயற்சியைச் செய்து புகழும் புண்ணியமும் அடையத் தவருர்களென்றே நம்புகிறேம். இத் தேசகீத புத்தகத்தின் விலை அணு 2. விலாசம்: இந்தியா பத்திரிகை யாபீஸ் 34, பிராட்வே சென்னை''.

## ஜன்மபூமி

பாரதியார் 1909ஆம் ஆண்டில் தம் பாடல்களின் வேறொரு தொகுப்பை ஜன்மபூமி எனப் பெயரிட்டு வெளியிட்டார். அதில் ஜாதியகீதம், ஜயபாரத, பாரத தேவியின் திருத்தசாங்கம், மாதாவின் துவஜம், எங்கள் தாய், தொண்டு செய்யும் அடிமை, பாரததேவியின் அடிமை, சுதந்திரப்பெருமை, சுதந்திரதாகம், சுதந்திரப் பள்ளு, சுதந்திரதேவியின் துதி முதலிய 16 தலைப்புக்கள் அடங்கியிருந்தன.

## புத்தகப் புதினம் — வித்தியாபானு

— ஞானரதம் —

பாரதியார் புதுவை ஸி. சுப்பிரமணிய பாரதியார் என வழங்கிய காலத்தில் வெளியிட்ட இந்நூலைப்பற்றி சௌமிய ஆண்டு மாசி மாதம் 1910 பெப்ருவரி மதுரையிலிருந்து வெளிவந்த வித்தியாபானு என்னும் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை பிரசுரித்த குறிப்பு வருமாறு:

''இந்நவீன நூல் புதுவை ஸ்ரீ. ஸி. சுப்பிரமணிய பாரதியாரவர்களால் எழுதப்பெற்றது. மனத்துயரை மாற்றி மகிழ்ச்சி வீட்டில் ஏற்றுதற்குத்தக்க வசன நூல், இதன் விலை அணு 8. புதுவை சூரியோதயம் ஆபீஸில் விலைக்குப்பெறலாம்''.

## மாதாவாசகம்

பாரதியார் வெளியிட்ட மூன்றும் தொகுதி 1910ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதில் மகாசக்தி, மகாசக்திக்கு விண்ணப்பம், காளிக்கு சமர்ப்பணம், நான், மனத்திற்குக் கட்டளை, பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி முதலிய 11 பாடல் தலைப்புக்கள் அடங்கியிருந்தன. இவற்றுள் ஒரு தலைப்பு சுயசரிதை என்பதாகும். இதில் 115 பாடல்கள் உள்ளன.

## பாரதியாரின் தெய்வ நம்பிக்கை

பாரதியார் தெய்வ நம்பிக்கையும் தீவிரபக்தியும் கொண்டவர். அவர் வேதாந்தம் கேட்டதும் படித்ததும் உண்டு. அவர் புதுச்சேரியில் ஒரு வீட்டைவிட்டு வேறொரு வீட்டுக்குக் குடிபுகுந்தார். புதுவீட்டில் அவர் சுகமாக உறங்கிய வேளையில் பழைய வீடு புயற்காற்றில் சின்னு பின்னமானது. அதைக்கண்டு தம்மைக் காத்த கடவுளைப் போற்றினர். பக்தியுடன் போற்றி நின்ருல் பயமனைத்தும் தீரும் என்பது பாரதியாரின் நம்பிக்கை.

''நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே இந்த
நேரமிருந்தால் என்படுவோம்?
காற்றென வந்தது கூற்றமிங்கே, நம்மைக்
காத்தது தெய்வ வலிமையன்றோ?''

## பாரதியாரின் காதலிமார்

பாரதியார் காலத்துக்குக் காலம் மூன்று பெண்களைக் காதலித்து அவர்களை நெருங்குவதற்கு வெகுவாக முயற்சியெடுத்தார். அவரின் முதற்காதலி கலைமகள். அவள் இவர் காதலுக்குப் புன்னகை பூத்து, மெதுவாக மறைந்து விட்டாள். பாரதியாரின் இரண்டாங் காதலி அலைமகள் என்னும் திருமகள். அவள் இவரின் காதலை மறுத்துவிட்டாள். பாரதியாரின் மூன்றும் காதலி பராசக்தி என்னும் மலைமகள் பாரதியாரின் பராசக்தி காதல் நிறைவேறி நீண்ட காலம் நிலைத்து நின்றது.

பாரதியாருக்கு எல்லாப் பேறுகளையும் அள்ளிச் சொரிந்தவள் பராசக்தியே. அவள்மீது பாரதியார் கொண்ட காதலில் அவரின் நோக்கங்கள் வெளிப்படையாகத் தெரிகின்றன. பாரத நாட்டுவிடுதலை, தமிழ் மொழியின் முன்னேற்றம், பெண்ணின் பெருமை.

## பட்டினியிற் பாடிய முப்பெரும் பாடல்கள்

பாரதியார் புதுச்சேரியில் புகலடைந்தும் வளமாக வாழவில்லை. சிலவேளை ஒருவேளை உண்டும், சிலவேளை எதுவுமே கிடையாமல் பட்டினிகிடந்தும் வந்தார். பட்டினி கிடந்த காலங்களில் அவர் கடற்கரையில் உலாவியபோது உண்டான பாடல்கள் முப்பெரும் பாடல்களான கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு என்பனவாம்.

## தாயகம் மீண்டமை

பாரதியார் புதுச்சேரியில் பத்தாண்டுக் காலம் வாழ்ந்தவர். அங்கிருந்து தாயகம் மீள விரும்பியவருக்கு அரசாங்கம் கட்டாயம் கைதுசெய்யும் என்னும் நினைவு வந்தது. இடையில் பாரதிதாசன் என்னும் கனகசுப்பு ரத்தினம் போன்றவர்கள் அபிமானிகள் தடுத்து வந்தார்கள். இப்படியாகத் தடுக்கப்பட்ட பாரதியார் ஈற்றில் 1918 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புதுச்சேரியை விட்டுத் தம் தாயகம் புறப்பட்டார்.

## கடலூரிற் கைது

பாரதியாரின் போக்கைக் கவனித்துவந்த பொலிசார் அவரை நடுவழியில் கடலூரிற் கைது செய்தனர். அங்கே அவருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பாரதியாரின் நிலைமையைக் கேட்டறிந்த அரங்கசாமி ஐயங்கார் விரைந்து சென்று மேலதிகாரிகளைக் கண்டு பேசினர். சி. பி. இராமசாமி ஐயர், அன்னிபெசண்ட் அம்மையார்

★ ஊருக்கு உழைத்திட வேண்டும் ★

முதலானோரும் அவருக்கு ஆதரவாக நின்றனர். அவர் மீது குற்றமில்லை என்று காண்பித்த பின்னர் அவரை விடுதலை செய்தனர்.

## கடையத்தில் மனைவாழ்க்கை

கடலூரில் விடுதலையடைந்த பாரதியார் தம் மனைவியின் பிறந்த ஊரான கடையம் சென்று வாழ்ந்தார். வீடு நடத்தப் பொருளில்லாத பாரதியாருக்கு வீடு நிறையக் கையெழுத்துப் பிரதிகள் கவனிப்பாரற்றுக் குவிந்து கிடந்தன. பாடிப்பாடி மேடைகளில் அருமையாகப் பேசிவந்த பாரதியாருக்கு உள்ளூரிலும், வெளியூர்களிலும் நல்ல மதிப்பு நிலவியது. அவர் உருக்கமாக உணர்ச்சி ததும்பப் பேசிவந்தார்.

## காந்தியடிகளைக் கண்டமை

காந்தியடிகள் 1919 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டுக்கு வருகை புரிந்து, ரௌலட் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சத்தியாக்கிரகப் பாதை அமைக்க இருந்தார். சென்னையில் கதீட்ரல் வீதியில் இராஜாஜியின் மனையில் தங்கியிருந்தார். பெரியவர்கள் பலர் கைகட்டித் தூரத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தனர். பாரதியாருக்குப் புதுச்சேரியில் பழக்கமான வ. ரா. என்பவர் வாசலிற் காவல் நின்றார். அவ்வமையம் உள்ளே புகுந்த பாரதியார், ''என்ன ஓய்!'' என்று வரா அவர்களைத் தட்டிவிட்டு உள்ளே புகுந்து காந்தியடிகளின் அருகே அமர்ந்தார்.

''மிஸ்ரர் காந்தி! நான் நடத்தவிருக்கும் கூட்டத்துக்கு நீங்கள் தலைமைதாங்க முடியுமா?'' என்று வெகு உற்சாகத்தோடு கேட்டார். காந்தியடிகள் நாட்குறிப்பைப் பார்க்கச் சொல்லி, அன்றைய தினம் தமக்கு அவகாசம் இல்லை என்று சொன்னதும், பாரதியார் எழுந்து விறுவிறு என்று வெளியேறினாராம்.

காந்தியடிகள் அவரைப்பற்றி விசாரித்தறிந்து, அவரைக் கவனமாகப் பாதுகாக்கும்படி நண்பர்களிடம் கூறினாராம். காந்தியடிகளின் தொண்டில் ஈடுபட்ட பாரதியார் மனநிறைவோடு பஞ்சகம் என்னும் ஐந்து பாடல்கள் பாடிக் காந்தியடிகளைப் போற்றியுள்ளார்.

## மறைவுத் துயரம்

பாரதியாருக்குத் தம் இறுதிக்காலம் வரப்போகிறது என்று நன்றாகத் தெரிந்தது. அதனால் அவர் எட்டுணையும் கவலையடையவில்லை. மரணத்தின் பின் வாழ்வு என்பதைப்பற்றி பேசியும் வந்தார். ஜீவன் முத்தனின் தன்மைபற்றி எழுதிவந்தார்.

பாரதியார் சில காலம் சென்னையில் வாழ்வதற்குச் சென்று திருவல்லிக்கேணியில் தங்கினார். பார்த்தசாரதி கோயிலுக்குப் போகும் வழக்கமுடைய பாரதியார், கோயில் யானையோடு நெருங்கிப் பழகிப் பழம், தேங்காய், கரும்பு கொடுத்து வந்தார். ஒரு நாள் யானை மதங்கொண்டு நின்ற வேளையிலும் இவர் தேங்காயை நீட்டிய போது, யானை இவரைத் தும்பிக்கையால் தூக்கி நிலத்தில் போட்டது. மூர்ச்சையடைந்த பாரதியாரை, நண்பன் குவளைக் கண்ணன் துணிகரமாகத் தூக்கி வெளியேற்றினார்.

பாரதியாருக்கு உள்நோவு உண்டாகியிருந்தது. உடல் பலயீனப்பட்டு, வயிற்றோட்டம் உண்டானது. மூன்று மாத காலச் சுகயீனத்தின் பின் அவர் 11-9-1921ல் மறைந்தார். நண்பர்கள் அபிமானிகள் அவரின் இறுதிச் சடங்கை நிறைவேற்றி, அவர் பாடல்களைப் பாடி மனவாறுதல் அடைந்தனர்.

## இயற்கைக் கவிஞர்

பாரதியார் ஆங்கில இலக்கியத்தில் இயற்கைப் புலவர்கள் (Nature poets) படைப்புக்களைப் படித்துச் சுவைத்தவர். பழைய தமிழ்ப் புலவர்களின் நாட்டு வளம், மலை வளம், ஆற்று வளம் முதலியவற்றையும் படித்தறிந்தவர். அவரே இயற்கையை நேரிற் கண்டின்புற்றவர். அவர் கண்ட காலைப்பொழுது, அந்திப்பொழுது, நிலாப்பொழுது, காற்று, மழை, வெள்ளம், விண்மீன், மின்னல், இடி, ஒளி, வெள்ளம், மலை, சோலை, தோப்பு, காடு, பறவை, மிருகம் முதலியவற்றை இயற்கையாகவே பாரதியார் பாடியுள்ளார். ''கொட்டியிடிக்குது மேகம், கூகூவென்று விண்ணைக் குடையுது காற்று. எட்டுத்திசையும் இடிய மழை எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா'' என்றெல்லாம் அவர் சித்திரிப்பர்.

## இசைக் கவிஞர்

பாரதியார் பாடிப்பாடி எழுதியவர். பாடிப்பாடிப் பேசியவர். அவர் படிக்கப் பாடவில்லை. அவர் பாடவே பாடினார். பாடப் பாடிய அவர் இசைக் கவிஞர். கேட்பவரின் செவியும் சிந்தையும் குளிரவே அவர் பாடினார். அவர் தமிழிசை ததும்பப் பாடியவர். அவர் பாடலைக் கேட்டுக் கிறுகிறுத்தவர் பலர். அதனால் பாட்டுக்கொரு புலவர் பாரதியடா என்று பட்டி தொட்டிகளிலும் புகழ் பரவலாயிற்று.

## உணர்ச்சிக் கவிஞர்

உணர்ச்சியே கவிதைக்கு மூலகாரணம். உணர்ச்சியின்றேல் கவிதையில்லை. உணர்ச்சியூட்டாத கவிதை கவிதையாகாது. பாரதியார் உணர்ச்சிக் கவிஞர். அவரின் பாடல்கள் உணர்ச்சியூட்டப் புலமை பெற்றவர் பலர். கவிதாதர்மம் அறிந்த பாரதியார் உணர்ச்சியூட்டும் திறனையும் நன்கறிந்தவர். ''என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?'' என்று பாடத் தொடங்கும் போதே அவர் பாடல் உணர்ச்சி ஊட்டி விடுகிறது. ''நாமிருக்கும் நாடு நமது என்பது அறிந்தோம், இது நமக்கே உரிமையாம் என்பது அறிந்தோம்'' என்பது உணர்ச்சியில் தேற்றம். ''உச்சிமீது வானிடிந்து வீழுகின்றபோதிலும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பது இல்லையே'' என்பது உணர்ச்சியின் உச்சம்.

## உண்மைக் கவிஞர்

பாரதியார் உள்ளதை உள்ளவாறே பாடியவர். அவர் எதையும் புனைந்துரைக்கவில்லை. புலவர்க்குரிமையான தற்குறிப்பேற்றம் புனைந்துரைத்தல் முதலிய துறைகளை அவர் தொடவில்லை. அவர் பண்டு நிகழ்ந்தவற்றுள் உண்மையெனக் கண்டவற்றையே பாடினார். எதிர்காலத்து வரப்போவனவற்றையும் பாடினார். அவை வந்துள்ளமை கண்கூடு.

**★ தமிழர்க்குப் புதுவாழ்வு வேண்டும் ★**

## குழந்தைக் கவிஞர்

இன்று குழந்தைக் கவிஞர் வரிசையில் அழ. வள்ளியப்பா முதலாகப் பலர் உணர்ச்சியோடு இனிய எளிய கவிதைகளைப் பாடி வருகின்றனர். குழந்தைகளுக்கு என்று தனிக் கவிதைகள் பாடிய முன்னோடிக் கவிஞர் பாரதியாரே தான். கொஞ்சு தமிழில் பிஞ்சுள்ளங்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் பாப்பாப் பாட்டுப் பாடியவர் பாரதியார். ''ஓடிவிளையாடு பாப்பா'' என்று தொடங்கும் பாடல் முதலாக அவரின் குழந்தைப் பாடல்கள் பலவாகும்.

## சமயக்கவிஞர்

பாரதியார் கன்னியாகுமரி முதல் காசிவரை நேரில் அறிந்தவர். மக்களின் வாழ்க்கை முறைகளையும் வழிபாட்டு முறைகளையும் நன்கறிந்தவர். இறைவன் ஒருவனே என்ற நம்பிக்கையில் ஊறியவர். சமயத்தைச் சாட்டிப் பெரியவர்கள் செய்த கெடுபிடிகளைக் கண்டித்தவர். பரம்பொருள் உருவத்தாலே உணர்ந்துணராது பலவகையாகப் பரவிடும் ஒன்றே என்று திடமாகக் கூறியவர்.

## சீர்திருத்தக் கவிஞர்

ஆட்சிப்பீடத்திலிருந்த ஆங்கிலேயர் சிலர் மேயோ என்னும் பெண் எழுத்தாளர் ஒருவரை இந்தியாவுக்கு அனுப்பி அன்னை இந்தியா என்றொரு நூல் எழுதுவித்தனர். மேயோ இந்தியாவிற்கண்ட ஒருசில குறைபாடுகளை மிகப்பெரிதாக்கி அவதூறாக எழுதி அம்பலமாக்கியவர்.

நாட்டில் நிலவிய சிறிய குறைபாடுகளையும் சீர்திருத்தச் சிந்தைகொண்டு எழுந்தவர்களுள் பாரதியாரும் ஒருவர். அவர் தமிழ்நாட்டில் தமிழ்மொழியில் சீர்திருத்தம் பற்றிப் பாடிய பாடல்கள் பாரதநாடு முழுவதுக்கும் பொதுவானவை. ''சாதிக்கொடுமைகள் வேண்டாம்-அன்பு தன்னில் செழித்திடும் வையம்'' ''ஒன்றுண்டு மானிடசாதி'' என்றெல்லாம் பாடினர். கற்பைப்பற்றிப் பேசுபவர்களைப் பார்த்து அஃது ஆண்களுக்கும் பொதுவானதே என்றார்.

## நாட்டுக்கவிஞர்

பாரதியாரின் தமிழபிமானம் மொழியபிமானமாயுள்ள தன்மையில், நாட்டபிமானம் பாரத தேசாபிமானமாய மைந்துள்ளது. பாரததேசமென்று பெயர் சொல்லும் போதும், அதைத் தந்தையர் நாடு என்றுகூறிப் பெருமைப் படும்போதும் பாரதியார் தம்மை மறந்து பரவசப்பட்டுள்ளார். பாரதநாட்டுக்கு எல்லைகள் வகுத்தும், அதற்குத் தசாங்கம் கூறி மகிழ்ந்தும் வாழ்த்தியும் போற்றுகிறார். ஒன்றிணைந்த பாரதநாட்டின் ஒப்பில்லாத சமுதாயத்தை அவர் உருக்கமாகப் பாடுவதை வகுப்புவாதிகள், தேசியவாதிகள், பொதுவுடைமை வாதிகள் எல்லோரும் தலை வணங்கிக் கேட்கின்றார்கள்.

பழம்பெரும் பாரத நாகரிகத்தை வளர்த்த சிந்து நதியிலே திராவிட மக்கள் கூட்டத்தவர் ஒன்றிணைந்து உல்லாசமாக நிலாவேளையில் ஓடம்விடும் இன்பத்தைப் பாரதியார் என்ன அழகாகச் சித்திரித்துச் சிந்திக்க வைத்துள்ளார். 'சிந்துநதியின் மிசை நிலவினிலே சேரநன்னாட்டிளம் பெண்களுடனே சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத் தோணிகளோட்டி விளையாடிவருவோம்.'

## சமுதாயக் கவிஞர்

பாரத சமுதாயம் சீரழிந்து, சிறப்பிழந்து, பெருமை குன்றி நிலவியதைக்கண்டு மனம்நொந்து, சமுதாய சீர்திருத்தத்துக்குக் கவிகள் பாடியவர் பாரதியார்.

''ஏழை என்றும் அடிமை என்றும் எவருமில்லை சாதியில், இழிவுகொண்ட மனிதர் என்பது இந்தியாவில் இல்லையே'' என்றெல்லாம் அவர் முழக்கினர்.

## பெண்ணுரிமைக் கவிஞர்

பருவமங்கையரைச் சந்திரன், கந்தர்வன், அக்கினி சுவைக்கிறார்கள் என்று கருதிய மக்கள் பெண்களைக் குழந்தைப்பருவத்திலேயே திருமணஞ் செய்து கொடுத்தார்கள். பெண்கள் கைப்பொம்மைகளாய், எழுத்தறிவில்லாமல் வாழ்ந்த காலம் போய்விட்டது என்று பெண் கல்வி, பெண்கள் சுதந்திரம் முதலியவற்றுக்காகப் பாரதியார் பாடியுள்ளார்.

''மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்'' என்று வீராவேசங்கொண்டவர் அவர்.

## பொருளாதாரக் கவிஞர்

பொருளாதாரம் நன்கமைந்திருந்தால் அது நாட்டைப் போஷித்துக் காக்கும். பொருளாதார சுதந்திரமில்லையேல் அரசியல் சுதந்திரத்தால் ஆக்கம் எதுவும் உண்டாகாது. பொருள்வளம் பெரிது என்று பாரதியார் தீர்க்கதரிசனமாகப் பல பாடல்கள் பாடியுள்ளார். எல்லோரும் உண்ணவேண்டும். எல்லோரும் உடுக்கவேண்டும். எல்லோருக்கும் உறைவிடம் வேண்டும் என்றெல்லாம் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைபற்றிப் பேசமுன்னரே பாரதியார் பாடியுள்ளார்.

''தனியொருவனுக்கு உணவு இல்லை எனில் சகத்தினை அழித்திடுவோம்'' என்பது அவரின் வீரகர்ச்சனை, கரிசனையுமாம்.

## புதுமைக் கவிஞர்

பாரதியாரைப் புதுமைக்கவிஞர் என்று புலவர்கள் போற்றுகிறார்கள். தொல்காப்பியர் சொன்ன விருந்து என்னும் அமைப்புக்குப் புதுக்கவிகள் பாடியவர் பாரதியார். பாரதியார் கையாண்ட சொல், நடை, முறை, யாப்பு, உவமை முதலியன எல்லாம் புதுமையானவை, விருந்தானவை. 'புதுமை விரும்பு' என்பது பாரதியாரின் புதிய ஆத்திசூடி.

## வரலாற்றுக் கவிஞர்

பாரதியார் வரலாற்று வல்லுநரல்லர். அவர் வரலாற்றுத்துறையில் ஈடுபட்டவரும் அல்லர். அவர் அவ்வப்போது பாடிய பாடல்களில் பாரதநாட்டில் தொன்றுதொட்டு நிகழ்ந்த இதிகாசபுராண நிகழ்ச்சிகளையும், வெள்ளைக்காரரின் கெடுபிடிகளையும், தம்காலத்து மகான்கள், மேதைகளின் உபகாரிப்புகளையும், சமகாலத்து உலக

நிகழ்ச்சிகள், புரட்சிகள் அரசியல் மாற்றங்களையும் அடுக்கடுக்காகப் பாடியுள்ளார். வாழ்த்தவேண்டிய இடங்களில் வாழ்த்தியுள்ளார்.

உள்நாட்டின் நிகழ்ச்சிகளைச் சுயசரிதை, மகாத்மா காந்தி பஞ்சகம், குருகோவிந்தர், தாதாபாய் நவுரோஜி, பூபேந்திரர் விஜயம் முதலிய தலைப்புகளில் பாடியுள்ளார். வெளிநாட்டு நிகழ்ச்சிகள் பலவற்றை, பெல்ஜியம், ருஷ்யா, இத்தாலி முதலிய தலைப்புகளில் பாடியுள்ளார்; பெல்ஜியத்தின் வீரத்தைப்போற்றி, ருஷ்யப் புரட்சியை வரவேற்றுள்ளார். ''ஆகாவென்றெழுந்தது பார் யுகப் புரட்சி'' என்று அருமையாகப் பாடுவர்.

## தேமதுரத் தமிழோசை

இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்குமுன், மதுரைத் தமிழ்ச்சங்கக் கூட்டத்தில் கே. சி. வீரராகவையர் என்பார் தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் எனப் பேசியபோது, பாரதியாரின் பாடல்களைப் பக்கபலமாக எடுத்தாண்டு பாடினர்.

## யாழ்ப்பாணத்தில் பாரதி பாடல்கள்

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் மருதனார் மடம் என வழங்கும் இராமநாதன் மகளிர் கல்லூரியில், கலை நிகழ்ச்சிகளில் ஸ்ரீ கணபதிஐயர் முதலானோர் வயலின் வாத்திய சகிதம் பாரதியாரின் பாடல்களை இனிமையாகப் பாடிவந்தனர்.

## தபால் தலையில் பாரதியார் படம்

தமிழ்நாட்டு அரசாங்கத்தின் பேருழைப்பினால் பாரத நாட்டு அரசாங்கம் தனது தபால் தலையில் தமிழ்ப் புலவர்களையும் பெருமக்களையும் காலந்தோறும் சித்திரித்து வெளியிட்டுக் கனம்பண்ணியுள்ளது. திருவள்ளுவருக்கு முத்திரை வெளியிட்ட 1960ஆம் ஆண்டிலேயே பாரதியாருக்கும் பதினைந்து சத முத்திரை வெளியிட்டுள்ளது. கோயமுத்தூர் முதல் நீலகிரி வரையுள்ள பதினைந்து மாவட்டங்களையன்றி, பாரதநாட்டில் எங்கெங்கே தமிழர்களும், தமிழபிமானிகளும் இருந்தார்களோ அவர்கள் எல்லோரும் பாரதியாரை நினைத்து வெகுவாகப் பெருமைப்பட்டார்கள்.

## பாரதியாரின் பாடல்களின் நாற்பெரும் பிரிவுகள்

பாரதியாரின் பாடல்களைத் திறனாய்வுக்காரர் நாற்பெரும் பிரிவுகளில் அடக்குவர். அவை:

முதற்பாகம் — தேசிய கீதங்கள்

1. பாரதநாடு
2. தமிழ்நாடு
3. சுதந்திரம்
4. தேசிய இயக்கப் பாடல்கள்
5. தேசியத் தலைவர்கள்
6. பிறநாடுகள்

இரண்டாம் பாகம் — தெய்வப்பாடல்கள்

1. தோத்திரப் பாடல்கள்
2. ஞானப் பாடல்கள்

மூன்றும் பாகம் — பல்வகைப் பாடல்கள்


1. நீதி
2. சமூகம்
3. தனிப்பாடல்கள்
4. சான்றோர்
5. சுயசரிதை

நான்காம் பாகம் — முப்பெரும் பாடல்கள்

1. கண்ணன் பாட்டு
2. பாஞ்சாலி சபதம்
3. குயில் பாட்டு

## பாரதியாரின் வசனநடை

''ஸ்படிகம் போன்ற தெளிவும், வைரம் போன்ற உறுதியும் பெற்று, பேச்சுத் தமிழிலே ஆழ்ந்த கருத்துக்களை எழுதி, சிந்திக்கவும் உபயோகப்படுத்தலாம் எனக் காட்டியுள்ளார். தமிழுக்குள் கிடக்கும் எல்லையற்ற சக்தியையும் லாகவத்தையும் அவரின் வசனநடையிற் பார்த்துக் கொள்ளலாம். பயன்கொண்ட கற்பனைசக்தியும், கொழுந்துவிட்டெரியும் நாட்டன்பின், விசாலமான தருமஞானமும் நோவாத ஹாஸ்ய ரஸமும் தமிழ்த்தாயின் செல்வக் குழந்தை பாரதியாரின் எழுத்தில் ஒளிவிடுவதை அநுபவிக்கலாம்.'' ★



## பஞ்சதந்திரம்

பெண்களின் கற்புக்கு முன்னே நெருப்பு குளுமையடையும். நிலா நெருப்பாகிவிடும். கெட்டவன் நல்லவனாகிவிடுவான்.

வேதத்திலோ சாஸ்திரத்திலோ காணாததையும் கேளாததையும், பிரபஞ்சம் முழுவதிலுமுள்ள சகல விஷயங்களையும், ஜனங்களிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

குலம், குணம், அந்தஸ்து, கல்வி, செல்வம், அழகு, இளமை இந்த ஏழு அம்சங்களையும் கவனித்து மணஞ் செய்தல் நல்லது என்பர்.

உடம்பை அசைக்காதவன் புகழையும், பதட்டமுள்ளவன் நண்பனையும், சொத்து இழந்தவன் குலத்தையும், பணம் படைத்தவன் தர்மத்தையும், பற்றுமிகுந்தவன் கல்வியையும், லோபி சுகத்தையும் இழந்தவர்களாவர்.

★ இன்று எமை வருத்தும் இன்னல்கள் மாய்க ★

## கலாநிதி துரைராசசிங்கம் அவர்கள்



மலேசிய வாசியாய எஸ். துரைராசசிங்கம் 78 வயது நிரம்பியவர், 45 ஆண்டுகள் ஆசிரியராயிருந்தவர், 86 நூல்கள் எழுதியவர், நூற்றுக்கணக்கான கட்டுரைகள் எழுதியவர், இன்றும் எழுதிக்கொண்டே இருப்பவர்.

துரைராசசிங்கம் அவர்கள் கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியைப்பற்றி 12 நூல்கள் எழுதியவர். கலா யோகியைப் பற்றிய சகல தகவல்களையும் திரட்டி உலகறி யச் செய்து புகழ்பெற்றவர்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இவரின் தந்தையார் 1892 முதல் 1918 வரை மலேயாவில் புகையிரத நிலையங் களில் வேலை பார்த்தவர். துரைராசசிங்கம் 1918 முதல் 1924 வரை யாழ்ப்பாணத்தில் விக்ரோறியாக் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி ஆகிய மூன்று கல்லூரிகளிலும் சைவப்பெரியார் புலோலி சிவபாதசுந்தரம் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று கற்றவர். யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து மெற்றிக்குலே சன் சித்தியெய்தியவர்.

மலேயா சிங்கப்பூர் நாடுகளின் ஊர்ப்பெயர் வரலாறு எழுதி 1927ஆம் ஆண்டிலேயே எழுத்தாளர் உலகிற் புகுந்தவர், இன்று ஓய்வுபெற்றும் படிப்பதும் எழுதுவது மாகப் பொழுதுபோக்குபவர். அவரின் எழுத்தாற்றலை மலேசிய மந்திரிகள், பிரதமர், இராஜாஜி, நேரு முதலா னோர் மதித்துள்ளனர்.

கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் தம் வரலாற்றை விரிவாக எழுதிவந்த துரைராசசிங்கம் அவர் களுக்குத் தம்மைப்பற்றிய தகவல்களை எல்லாம் அனுப்பி யிருந்தார். ''இனி என்னைப்பற்றி உங்களுக்கு எழுது வதற்கு என்னிடம் ஒன்றுமே இல்லை'' என்று அவர் எழுதும் அளவுக்கு துரைராசசிங்கம் அவரிடம் எல்லா வற்றையும் அறிந்து கொண்டார்.

ஆனந்தகுமாரசுவாமி எழுதிய நூல்களையும், அவரைப் பற்றித் தாம் எழுதிய நூல்களையும் யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்த துரை ராசசிங்கம், யாழ்ப்பாணத்தில் பண்ணிசை வளர்வதற் காக ஆண்டுதோறும் தங்கப்பதக்கம் வழங்கவும் மூல நிதியுதவியுள்ளார்.

முன்னர் யாழ்ப்பாணத்து மாணக்கர் மகாநாடு, வாலிபர் மகாநாடு எனவும் பெயர்பெற்று நல்லமுறையில் சீர்திருத்தஞ் செய்யத்தொடங்கிய வேளையில், துரை ராசசிங்கம் மு. பாலசுந்தரம் அவர்களுடன் இணைக்காரிய தரிசியாய் இருந்தார்.

மகாத்மா காந்தியடிகளோடு நெருங்கிப் பழகியவர் களுள் ஒருவரான துரைராசசிங்கம் பெரிய காந்திப் பக்தராகித் தம் மைந்தனுக்குக் காந்தி என்றே பெயரிட் டுள்ளார்.

கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி பற்றி நன்ருக அறிந்த நிபுணராய துரைராசசிங்கம் தமது மற்ரெரு மைந்தனுக்கு ஆனந்தகுமாரசுவாமி எனவே பெயரிட்டார்.

## யமுனு ஏரியும் கங்கா தடாகமும்

ஆரிய சக்கரவர்த்திகள் யாழ்ப்பாண அரசை அமைத்து நல்லூரைத் தலைநகராகக்கொண்ட காலத்தில் தொட்ட பெரிய ஏரியில் யமுனு தீர்த்தத்தைக் காவடிகளிற் கொண்டு வந்து கலந்தமையால் அது யமுனு ஏரி எனவழங்கி, நாளடைவில் யமுனரி என வழங்குவதாயிற்று.

தெல்லிப்பழையில் நாள்தோறும் வளர்ந்துவரும் அருள்மிகு துர்க்கையம்மன் கோயிலில் அண்மைக்காலத் தில் அடுக்கடுக்காக தேர், தேர்மண்டபம், இராசகோபுரம், திருமுறை மண்டபம், ஞானசுரபி என்றித்திறத்த அமைப் புக்கள் அணியணியாக அமைந்து வந்துள்ளன. எல்லா வற்றிலும் பார்க்கப் பிரமாண்டமான, பகீரதப் பிரயத்தன மான திருப்பணி ஒன்று, அங்கே தீர்த்தமாடுவதற்கான தடாகம் ஒன்று அமைக்கப்பெற்றுப் பொளிந்த கல்லாற் கட்டப்பெற்றமையாகும். இத் தடாகத்தைப் புனிதமாக்கு வதற்குக் கங்கா தீர்த்தம் குடங்களினின்று பெய்யப் பெறும்.

## அமரருக்கு எங்கள் அஞ்சலி

வட்டுக்கோட்டைத் தொகுதியின் மதிப்புக்குரிய பிரதி நிதி தா. திருநாவுக்கரசு அவர்கள் பிரிவுக்கு எங்கள் அநுதாப அஞ்சலி; அவர் ஐம்பதாண்டு நிறையுமுன் அமரரானமை ஆற்ரெணுத்துயரம். அவர் தொகுதி மக்களுக்கும், அவர் மனைவி மக்களுக்கும் ஆறுதல் கூறு கிருேம்.

## எழுச்சிவிழா ஒன்று

பூநகரியில் நல்லூரில் நேரடம்பன் பகுதியில் சங்கரி புரம் எனப் பெயர்கொண்ட இடத்தின் மாதர் சங்கத் தார் மகத்தான பணிசெய்து பனையபிவிருத்தி செய்து வருகிருர்கள். அவர்களின் உணவு உற்பத்தித்திட்டத்தின் எழுச்சி விழா 9-8-82 நல்லமுறையில் நடைபெற்றது. மில்க்வைற் தொழிலதிபரும், அண்ணு தொழிலதிபரும் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்புச் செய்தனர்.

ஒருவருடைய பெருந்தன்மை அவருடைய இருதயத்தி லன்றிப் புத்தியாகிய விவேகத்திலல்ல.

— மகாத்மா காந்தி

★ நம் தேயத்தினர் நாடொறும் உயர்க ★

# திரு. வி. க. நூற்றாண்டு விழா

திருவாரூர் விருத்தாசல முதலியார் மைந்தர் கலியாண சுந்தர முதலியார் என்னும் பெரியார் சென்ற நூற்றாண்டில் 1883ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 26ஆம் நாளில் தோன்றினவர்.

திரு. வி. க. பெரும் புலமையாளராயும், சிறந்த போதகாசிரியராயும், பதிப்பாசிரியராயும், உரையாசிரியராயும், செந்தமிழ்ப் பேச்சாளராயும், செறிந்த எழுத்தாளராயும், தேசத் தொண்டராயும், இளைஞர்களுக்குத் தோழராயும், வழிகாட்டியாயும், உற்ற நண்பராயும், தன்னலங்கருதாது பொதுநலங்கருதிய பண்பாளராயும் வாழ்ந்தவர். அவர் செய்த பணிகளையெல்லாம் தொகுத்துக் கூறமுடியாது. எனினும் நாமக்கல் கவிஞர் அன்று பாடிய ஒரு பாடலை இங்கு நினைவிற்கொள்ளலாம்.

''பாடெல்லாம் தான்பட்டுப் பலன்எலாம் பிறர்கொள்ளப்
பங்கு இன்றி உதவு பண்பன்;
ஏடெலாம் மேல் எனும் ''என்கடன் பணி செய்தல்''
என்பதே எண்ணி எண்ணி
நாடெலாம் வாழவே நாளெலாம் தன்சுகம்
நாடாது பாடுபடுவோன்;
வீடெலாம் தமிழ்மக்கள் கலியாண சுந்தரம்
வெற்றி கொண்டாட வேண்டும்''

இத்தனை பெருமைக்கும் உரிய பெரியவரான கலியாண சுந்தரனாரை உருவாக்கிய உரிமையும் பெருமையும் எங்கள் யாழ்ப்பாணத்து மேற்குப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளை அவர்களுக்கே உரியதாகும். எனவே கலியாணசுந்தரனார் எங்கள் ஆறுமுகநாவலரின் அடிச்சுவட்டில் வந்தவர், ஞான பரம்பரையில் வந்தவர் என நாம் பெருமைப்படுகின்றோம்.

ஆறுமுகநாவலரவர்களின் மாணுக்கரான தியாகராச பிள்ளை என்பாரின் மாணுக்கரான கதிரைவேற்பிள்ளையின் மாணுக்கர் கலியாணசுந்தர முதலியார் என்பதோடு மட்டும் நில்லாமல், இன்னுமொருவழியில் அவர் ஆறுமுக நாவலர் பரம்பரையோடு இணைந்துள்ளார். அஃதாவது நாவலரவர்களின் மருகரும், மாணுக்கருமான வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களின் உத்தம மாணுக்கரான கந்தமடவூர் சுவாமி நாதபண்டிதர் அவர்களின் மாணுக்கராயும் திரு. வி.க. பெருமை பெற்றுள்ளார்.

இவ்வாறாக இரு வழிகளில் எம்மவரான கலியாண சுந்தரனார் எல்லோர்க்கும் பொதுச் சொத்து. அவர் தேச பக்தர், தமிழ்மணி, சைவச் செம்மல் என்பதோடு தலை சிறந்த சமூக ஊழியருமாவர். அவர் தலைமை தாங்கிப் பேசிய மாநாடுகள் மிகப் பல. அவர் தலைப்புக்களை ஏற்றுப் பேசிய விடயங்கள் எண்ணிலடங்கா. அவரின் கவிதைகள் இலகுவான நடையில் பழகுதமிழில் பயின்று வந்தவை. அவரின் கட்டுரைகள் சொற்செட்டுடையனவாய்க் கற்கண்டோ, தேனோ, பாகோ என இனிமை பயப்பனவாகும்.

கலியாணசுந்தரனார் தம்மை வழிப்படுத்தி உருவாக்கிய குரவர்களைப் பெரிதும் மதித்துப் போற்றியுள்ளார். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 1901ஆம் ஆண்டிலேயே அவர் கதிரைவேற்பிள்ளை அவர்களுடன் பழகத் தொடங்கிப் பின் தொடர்ந்து படித்து வந்தார்.

பெரிய புராணத்தில் சிறு தேருருட்டிப் பழகுமாறு தம்மைப் பணித்த கதிரைவேற்பிள்ளை அவர்களுக்கு உரிமையுரை எழுதிய கலியாணசுந்தரனாரின் பெரிய புராணப் பதிப்பு குறிப்புரையோடு கூடியதாய் எவரும் போற்றிப் படிக்கும் தன்மையுள்ளதாயுள்ளது.

கலியாணசுந்தரனார் எங்கள் கதிரைவேற்பிள்ளையிடம் பெரியபுராணத்தை அடுத்துத் தணிகைப் புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய புராணங்களையும் யாப்பிலக்கணத்தையும் முறையாகப் பாடம் கேட்டவர். தம் ஆசிரியரைப் பற்றி விரிவான வரலாறு எழுதிப் புகழ்பெற்றவர்.

அருட்பா என்றால் சைவப் பெரியார்கள் இருபத்தெழுவர் பாடியருளிய பன்னிரு திருமுறைகளே என்று முன்னர் ஆறுமுகநாவலரவர்கள் வற்புறுத்தியமை மீண்டும் 1904ஆம் ஆண்டில் கதிரைவேற்பிள்ளை அவர்களால் நீதிமன்றம் வரையில் நிரூபிக்கவேண்டிய சூழ்நிலை ஒன்று உண்டானது.

அவ்வேளையில் கலியாணசுந்தரனார் பாடசாலைப் படிப்பில் மெற்றிகுலேசன் பரீட்சைக்கு எழுதவேண்டிய கட்டுப்பாட்டையும் விடுத்து நீதிமன்றஞ் சென்று தமது ஆசிரியருக்கு உதவியாகச் சாட்சி பகர்ந்து வெற்றியீட்டினார். அவ்வெற்றியினைப் பெருவிழாவாகச் சுவாமிநாத பண்டிதர் கொண்டாடியபோது கலியாண சுந்தரனாரும் நண்பர்களும் பக்கத் துணையாயிருந்தனர். இவ் விபரங்களையெல்லாம் கலியாணசுந்தரனார் செய்யுள் வடிவில் யாத்துத் தந்துள்ளார்கள்.

(தொடரும்)

## நூலகத் திறப்புவிழா

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தாரின் புதிய நூலகம் ஒன்றை மில்க்வைற் தொழிலதிபர் க. கனகராசா அவர்கள் திறந்துவைத்து வாசிப்பதன் நன்மைபற்றிப் பேசினார்.

## லண்டனில் விநாயக சதுர்த்தி

லண்டனின் சைவம் ஒளிவிடுவதற்குக் காரணம் அங்கே விழாக்கள், குருபூசைகள், பண்டிகைகள் ஒழுங்காக நடைபெறுதலாகும். அண்மையில் 22-8-82 விநாயக சதுர்த்தி விழாவில் 25 அர்ச்சகர்கள் இலட்சார்ச்சனை செய்தமை பிரமிப்புக்குரியதாகும்.

## புத்தகப் புதினம் நாயன்மார்

''இது நவசக்தி ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களால் நாயன்மார்களினெழுகலாறான செயல்களின் உண்மைக் கருத்துக்களை யாவரும் படித்துணரும்படி தெளிவாயெழுதப்பட்டுக் காரைக்குடிச் சிவனடியார் திருக்கூட்டத்தாரால் வெளியிடப்பட்டது''

இவ்வாறு திரு. வி. க. அவர்களின் புத்தகப் புதினம் செந்தமிழ் 1922 மார்கழி மாதத்தில் மதிப்புரை பெற்றது.

மற்றவர்களிடம் உதவி கேட்டுப் போகும்போது தன் சுதந்திரத்தை விற்பது போலாகிறது.

— மகாத்மா காந்தி

★ உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் ★

## பாரதியாரின் குயில் பாட்டு

பாரதியார் பாடிய முப்பெரும் பாடல்களுள் குயில் பாட்டு என்பதும் ஒன்று. மற்றையவை பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு என்பனவாம். குயில் பாட்டு ஏறக்குறைய 750 அடிகளைக் கொண்டதாகும். வெண்பாவுக்குரிய வெண்டளையால் அமைந்ததாகும்.

குயில் பாட்டு நகைச்சுவை ததும்பும் இனிய படைப்பு. அது கனவுலகும் நனவுலகும் கலந்து இணைந்ததாகும். அது குயிலைப் பொருளாகக் கொண்டு பாடப்பெற்றது. பாரதியார் குயில் பாட்டைக் காவியமாகவே பாடிக் குயிலின் பழம் பிறப்பு நிகழ்ச்சிகளையும் கூறுகிறார்.

குயில் முற்பிறப்பில் குயிலி என்னும் அழகியாய் மாடன் என்னும் மைத்துனனின் காதலியாய் இருப்ப, குறிஞ்சி நிலத்தவன் குரங்கன் என்னும் வேடன் அவளை மணக்க முயன்றான். இதற்குள் மலைநாட்டரசன் குயிலியைத் தனிமையிற் கண்டு மயங்கி அவளை மயக்கித் தழுவினான்.

இவர்கள் இவ்வாறாக இன்புற்றிருந்தவேளையில் மாடனும் குரங்கனும் அவ்வழியே தத்தம் போக்கில் போனபோது இவர்களைக் கண்டு கோபித்து அரசனைக் கொல்ல, அரசன் வெட்டிய வாள் வீச்சால் இவர்களும் வீழ்ந்திறந்தனர்.

இவ்வாறாக மறுபிறப்பில் மன்னன் தொண்டை நாட்டில் மானுடனாகப் பிறக்க, குயிலி குயிலாகப் பிறக்க, மாடன் மாடாகவும், குரங்கன் குரங்காகவும் பிறந்து குயிலைச் சுற்றி வட்டமிட்டுத் திரிந்தனர்.

இவற்றைக்கண்ட மானுடன் கோபிக்க, அவனை நான்காம் நாள் வருக எனக் குயில் கூறிற்று. மானுடன் ஒரு நாட் கூடப் பொறுதவனாய்க் குயிலைத் தேடிப்போன உள்ளம் உருக்கும் சம்பவத்தைப் பாரதியார் தம் பாட்டுத் திறத்தில் பரக்கக் காட்டியுள்ளார்.

குயிலும் குரங்கும் காதல் நாடகம் நடத்திய காட்சி இன்பகரமானது. அதை மானுடன் மறைந்திருந்து பார்த்துப் பொறுமையால் உடைவாளை எடுத்து வீசக் குரங்கு ஓடிவிட்டது. குயில் பறந்துவிட்டது.

மானுடன் அடுத்தநாள் குயிலின் இருப்பிடத்துக்குப் போனபோது அது மாட்டுடன் காதல் புரிந்து நந்தியே! என விருப்பத்தோடு அழைத்து, ''பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும் காந்தமே'' எனச் செல்லங் கொண்டாடியது. மானுடன் குயிலின் போக்குக்கு வருந்திக் கண்ணீர் வடித்தான். அடுத்து நாலாம் நாள் குயிலிடம் போனபோது கோபாவேசத்தானான். ''நீசக் குயிலே நிலையறியாப் பொய்மையே'' என்றெல்லாம் பேசி வருந்தினான்.

## பாரதியாரின் பாஞ்சாலி சபதம்

பாரதியாரின் பாஞ்சாலி சபதம் புதிய பாணியில் அமைந்த புரட்சிக் காப்பியம். எளிய பதங்கள், எளிய நடை, எளிய சந்தம், எளிய மெட்டு, படிக்காதவர்களும் விளங்கிக்கொள்ளும் பாடல். பராசக்தியே தம்மைத் தூண்டிப் பாடுவித்ததாகப் பாரதியார் பாடுவர்.

பாரதியார் படைப்பில் பாரத சக்தியே பாஞ்சாலியாக விளங்குகிறாள். விடுதலைப்போரில் வீரமுழக்கத்தையே பாஞ்சாலி சபதம் எனப் பாடுவர். அதில் வீரச்சுவை களிநடஞ் செய்கிறது. அது நாடகப் போக்கில் அமைந்து பல முறை மேடையேறியது. பாரதியார் குணசித்திர வருணனை பாடுவதில் தீரர். ''பாம்பைக் கொடியென்றுயர்த்தவன் அந்தப் பாம்பெனச் சீறி மொழிகுவான்'' என்று துரியோதனனைப் பாடுவர்.

பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தில் உவமேயம் உவமைகள் உச்சமானவை. துரியோதனன் குமைவுக்கு எரிமலையை உவமை கூறுவர். பாஞ்சாலியின் பெண்மையின் உயர்வையும் தருமத்தின் வெற்றியையும் காட்டுவர். பாரதியார் தாம் கொண்ட கருத்தை விளக்கப் பாரதக் கதையைக் கருவியாகக் கொண்டனர். பாரதநாட்டில் தருமம் பிசகலாகாது என்பது பாரதியாரின் உள்ளம். ''தொல்லுலகில் முடிமணிபோல் தோன்று நாடு. பாரதர் தன் நாட்டிலே நாசமெய்தப் பாவியேன் துணைபுரியும் பான்மை யென்னே'' என்பது விதுரர் வாக்கில் வந்த பாரதியாரின் உள்ளம்.

## பாரதி சபதம்? பாஞ்சாலி சபதம்?

பாஞ்சாலி சபதத்தைப் பாரதி சபதம் எனவே நினைத்துக் கொண்டு படித்துச் சுவைத்தல் வேண்டும் என்பர். பாஞ்சாலி அன்று கொண்ட உணர்ச்சியைப் பாரதியார் பாவனைபண்ணிப் பாடியுள்ளார். அதில் பெண்ணின் பெருமையே பெரு வழக்காய் வந்துள்ளது.

பாஞ்சாலி சபதம் இதிகாசமாகவும், காப்பியமாகவும் நாடகமாகவும் நடக்கின்றது. அதில் அவலம், வீரம், மகிழ்ச்சி முதலிய சுவைகள் கலந்துலாவுகின்றன. பாரதியாரின் கதை சொல்லுந் திறமை பாஞ்சாலி சபதத்தில் உச்சநிலை அடைகிறது. கதாபாத்திரங்கள் உரையாடுவதற்கேற்ற யாப்பைப் பாரதியார் கையாண்டுள்ளமை பிரமிப்படையச் செய்கிறது.

பாஞ்சாலியின் துகில் வளர்கிறது. எப்படி வளர்கிறது என்பதற்கு எத்தனை உவமைகள். பொய்யர் தம் துயரினைப் போல், புண்ணியவாளர் புகழினைப்போல், தையலர் கருணையைப் போல், கடல் அலைகளைப் போல், பெருமக்கள் செல்வத்தின் பெருகுதல் போல் -

''வண்ணப்பொற் சேலைகளாம் — அவை வளர்ந்தன
வளர்ந்தன வளர்ந்தனவே,''

## பாரதியாரின் கண்ணன் பாட்டு

பாரதியாரின் முப்பெரும் பாடல்களுள் கண்ணன் பாட்டு என்பதும் ஒன்று. அவர் கண்ணனைத் தம் தோழன், தாய், தந்தை, சேவகன், அரசன், சீடன், சற்குரு, குழந்தை, விளையாட்டுப்பிள்ளை, காதலன், காந்தன், காதலி, ஆண்டான், குலதெய்வம் என்னும் பலவாய தலைப்புகளில் நூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள் பாடியுள்ளார்.

முன்னர் ஆழ்வார்கள் அருளிப்பாடுகளில் கண்ட பாவனையின் உச்சம் பாரதியாரின் பாடல்களிலேதான் உண்டாகியுள்ளது. பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகவும், ஆண்டாள் காதலனாகவும் பாவனை செய்து அதன்வழி கண்ணன் கழலடியடைந்தவர்கள்.

பாரதியாரின் பாவஞசக்தியில் கண்ணன் பல்வேறு பாத்திரங்களாக அவர்தம் பாடல்களில் களிநடஞ் செய்கின்ருன். பாரதியாருக்காக அவன் பெண்வேடம் போடுவதோடு உண்மையான பெண்மையையும் ஒளிவிடச் செய்கிருன். கண்ணம்மாவாகிருன்.

## பாரதியாரின் பன்மொழிப் புலமை

பராதியார் ''யாம் அறிந்த மொழிகளிலே என்று துணிவாகப் பாடியவராதலால் அவருக்குப் பல மொழிகள் நன்கு தெரியும் என்பது அகச்சான்ருகிறது. அன்றி, அவரின் உடன்பிறப்பு, நண்பர்கள், சமகாலத்தவர் பலரும் அவருக்கு ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி, உர்து, வங்காளம், பிறெஞ்ச், தெலுங்கு, கன்னடம், நன்கு தெரியும் என்பர். அவர் சமஸ்கிருதத்தில் சில சுலோகங்களும், ஆங்கிலத்தில் பல கட்டுரைகளும் எழுதியுள்ளார். சேக்ஸ்பியர், டிறைடன், முதலான புலவர்களின் பாத்திரப் போக்குகள் பாரதியாரின் சின்னச் சங்கரன் முதலிய கதைகளில் நிகழுகின்றன.

## பாரதியாரும் ஆயகலைகளும்

பாரதியாருக்குக் கலைகள் பல தெரியும். அவர் கலைப் பிரியர். கலைகள் பற்றி அவர் எழுதிய கட்டுரைகள் மிகப் பல.

## பாரதியாரும் வீணையும்

பெண்கள் வீணை பழகவேண்டும் என்று பாரதியார் விருப்பத்தோடு எழுதினர். சங்கீதத் தேர்ச்சிக்கு வீணைத் தேர்ச்சி தகுந்த சான்ருகும். மைசூர், மலையாளப் பகுதிகளில் வீணை செல்வாக்குற்றுள்ளது. வீணை பழகினுல் தகுந்த தாள ஞானம் உண்டாகும். வீணை மனிதர் குரல் போலவே பேசும். அதன் ஒலி சாந்தமானது. சரஸ்வதி தேவியின் திருக்கரத்தில் வீணையுள்ளது.

## பாரதியாரின் தாயன்பு

தாயொக்கும் அன்பில் தயரதர் அரசாண்டான் என்று கம்பர் பாடுவர். பாரதியாரின் தாயன்பு உயிரினங்களிடத்து அவர் கொண்ட இரக்கத்தால் உண்டானது. தமக்கு உணவு கிடைத்தால் காகம், குருவி, எறும்பு முதலியவற்றுக்கு முதலில் ஊட்டுவது பாரதியாரின் அன்பின் தரம்.

## பாரதியாரின் முருகபக்தி

பாரதியார் சக்தி மீதும் கண்ணன் மீதும் கணக்கற்ற பாடல்கள் பாடியுள்ளார். அவர் செந்தமிழ்த் தெய்வம் முருகனை நன்ருக உபாசித்து வந்தார். சென்னையில் திரு. வி. க. அவர்கள் ஆரம்பித்த குகானந்த நிலையத்தில், பாலசுப்பிரமணிய பக்தஜன சபையினர் மத்தியில் திரு. வி. க. கேட்டதும் பாரதியார் முருகன் படத்தைப் பார்த்த வண்ணம் பாடிய பாட்டு, ''வருவாய் மயில் மீதினிலே'' எனத் தொடங்குவதாகும்.



## சுவாமி சிவானந்தர் ஜயந்தி தினம்

•

## 8-9-82

Pain is a blessing in disguise.
Pain is an eye - opener.
Pain is your silent Teacher.
Pain will turn your mind towards god.
Smile away your worries and sorrows.
Develop a balanced mind.
Be cheerful always.
Rejoice in the self within.


★ சர்வோதயம்
★ கிராமோதயம்
★ மாவட்ட அபிவிருத்தி
★ தேசோதயம்

இவ்வாறு எல்லோரும் மேம்பாடு அடைதல் வேண்டும் என்று மகாத்மா காந்தி, இரவீந்திரநாத் தாகூர், சுப்பிரமணிய பாரதியார் முதலாய பெருமக்கள் பாடுபட்டார்கள், வழிகாட்டினுர்கள்.

இவர்கள் சொன்ன வழியில்
மில்க்வைற் தொழிலகத்தார்
தங்களால் இயன்றவரை
பன்முகமாகப் பணிசெய்கின்ருர்கள்.

**உங்கள் அபிமானமும் ஆதரவும்**
**தொழிலகத்தாருக்குத் தேவை.**

மில்க்வைற் சேவை விசாலிப்பதற்கு
மில்க்வைற் தயாரிப்புகளுக்கு
அபிமானிகள் ஆதரவு பெருகுதல் வேண்டும்.

○ ஆதரவு பெருகினுல் அறப்பணி பெருகும் ○

— மில்க்வைற் —


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள், கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-9-82.